தனிப் பிரதி விலை அணா 0—1—6.

Reg No. M. 3066 1936-ஜனவரி 1.

PAHUTHARIVU ("REASON")

இதழ் 9.

# பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் சொந்த மாத வெளியீடு.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா.

| | | | |
|---|---|---|---|
| உள் நாடு ரூ. | 1—0—0. | வெளிநாடு ரூ. | 1—8—0. |
| தனிப்பிரதி | 0—1—6. | தனிப்பிரதி | 0—2—6. |

சந்தாதாரர்களுக்கு

பகுத்தறிவுக்கு மே மாதமே வருட ஆரம்பமானாலும் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜுலைமாதம் முதலில் இருந்துதான் பத்திரிகைகள் அனுப்பப்படும்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிடவேண்டும்

## விஷய அட்டவணை. பக்கம்


ஒன்று சேரும்! பாட்டு (சாமி. சிதம்பரனார்.) ... 1
பிரார்த்தனை (ஈ. வெ. ராமசாமி.) ... 3
சமய ஆதாரங்களின் ஊழல்கள் (டாக்டர் ப்ராஞ்சிலை) 7
ருஷிய விவாகம் ... ... ... 19
சென்னை உலகம் (லஜபதிராய்) ... 25
அப்போதே வாக்குக் கொடுத்திட்டேன் கதை (சித்திரபுத்திரன்.) 32
அவர்கள் ஜீவியம் செந்தேன் பாட்டு (மு. த. வேலாயுதம்) 36
பேய் அழைக்குமா? (S. சிவப்பிரகாசம்.) ... 38
காமுவின் சுய சரிதை (J. P. கிருஷ்ணன்) ... 44
நரியின் நயவஞ்சகம் (கா வேலாயுதம்.) ... 54
புகழ் மார்க்கம் (பர்னாட்ஷா) ... 63

# பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு,

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 1. ஈரோடு. 1936 ஜனவரி 1. இதழ் 9.


## ஒன்று சேரும்!


(சாமி. சிதம்பரனார்.)


("ஆத்ம தியாகம் பூர்த்தி செய்தார்" என்பதுபோன்ற பாடல்)

பல்லவி.

ஆண்மை போக்கும் தீமை யெல்லாம்
அழித்திட ஒன்று சேரும்! சேரும்!! (ஆண்மை)

அநுபல்லவி.

மாண்பாகும் செய்கை தன்னை யிங்காய்ந்து
மனங்கொளத் துன்பம் அழிவுறும் தேய்ந்து (ஆண்மை)

தொகையறா.

பாரோர்கள் நடுநடுங்கிப் போர்வைக்குள்
புகுந்தொளிய வீழும் மேலே
ஏராள மானபனி எரிகதிரோன்
எழுந்துவர மறைதல் போலே

ஆராயும் பேரறிவு பெற்றுவிடின்,
அனைவரையும் பிடித்ததாலே
தீராத தென்றெண்ணும் மதஞ்செய்யும்
தீதெல்லாம் தீர்ந்து போமே.

பாட்டு.

தெய்வீகம் என்றே சொல்லிடுஞ் சூது
தெரிந்திடின் உடனே நீங்கிடுந் தீது (ஆண்மை)

தொகையறா.

பெரியோர்கள் குழந்தைபால் தின்பண்டம்
பூச்சாண்டி காட்டி ஏய்த்தார்
அறியாத பேர்கள்தமை ஏய்க்கவே
புரோகிதர்கள் தந்திரம் கோத்தார்
தெரியாத சொர்க்கமுடன் நரகங்கள்
சொல்லி மிகத் தீங்கு சேர்த்தார்
வறியோர்கள் இவைநம்பித் துயருற்று
வாழ் நாளில் இன்பம் நீத்தார்.

பாட்டு.

அச்சம் அறிவின்மை சோம்பலும் நீங்க
ஆக்கம் பெருக்கும் ஊக்கமும் ஓங்க (ஆண்மை)

தொகையறா.

கூட்டினில் இரைவைத்தே எலிகள்தமைக்
கொலைசெய்யப் பிடிப்ப தொத்தே
பாட்டினில் சிற்பத்தே சித்திரத்தில்
பலபெரிய காவியத்தே
நாட்டினர் பலமூடக் கொள்கைகளை
நானிலத்தில் நிலைக்க வைத்தே
மாட்டினர் மனிதர்களைக் கொடுவிலங்கில்
சதறியார் மனமும் பித்தே

பாட்டு.

உள்ளத்தின் உள்ளே உண்மையுண் டாகின்
தள்ளி யழிக்கின்ற தாழ்வுகள் போகும்; (ஆண்மை)

---

# பிரார்த்தனை.

(ஈ. வெ. ராமசாமி)

பிரார்த்தனை என்பது இன்று உலகில் மக்கள் சமூகம் எல்லோரிடத்திலும் அதாவது கடவுளால் மக்கள் நடத்தப் படுகிறார்கள் என்று நம்பும் எல்லோரிடத்திலும் இருந்து வரு கிறது. இது எல்லா நாட்டிலும் எல்லா மதக்காரர்களிடத்தி லும் இருந்து வருகிறது.

பிரார்த்தனை என்பதற்கு ஜபம், தபம், வணக்கம், பூச னை, தொழுகை, முதலிய காரியங்களும் பெயர்களும் சொல் லுவதுண்டு.

இவையெல்லாம் கடவுளை வணங்கி தங்களுக்கு நன்மை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதேயாகும்.

தனக்கு வேண்டியவற்றை எல்லாம் அதாவது இம்மை யில்இவ்வுலகில் யுக்தி, செல்வம், சுகம், இன்பம், ஆயுள், கீர்த்தி முதலியவைகளும், மறுமையில் மேல்லோகத்தில் பாவமன்னிப்பு மோக்ஷம், நல்லஜன்மம் முதலியவைகளும் கிடைக்க வேண்டும் என்கின்ற ஆசையே பிரார்த்தனையின் முக்கிய நோக்கமாக இருந்து வருகிறது.

இந்த பிரார்த்தனையின் அஸ்திவாரம் உலகத்தைப் படைத்துக் காத்துவரும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என் பதும், அவர் சர்வ வல்லமையும் சர்வவியாபகமும் சர்வமும் அறியும் ஞானமும் உடையவர் என்பதும, அப்படிப்பட்ட அக்கடவுளை வணங்குவதால் ஒருவனுக்கு வேண்டிய சகல காரியத்திலும் சித்தி பெறலாம் என்பதுமானவைகள் தான் பிரார்த்தனைக்காரர்களின் கருத்தாயிருக்கிறது. இப்படிப் பட்ட பிரார்த்தனைக்கு அக்கடவுளை வணங்குவது, தோத் திரம் செய்வது, புகழ்வது, பஜனை செய்வது முதலிய காரி யங்கள் ஒருபுறமிருக்க பொருள்களைக் கொண்டும் கடவு ளைத் திருப்தி செய்து அவற்றால் பயன்பெறலாம் என்பதும் இந்த பிரார்த்தனையில் சேர்ந்ததாகும்.

அதாவது கடவுளுக்கு இன்ன இன்னது செய்வதாக நேர்ந்து கொள்ளுவது, ஜீவ பலிகொடுப்பது, கோயில் கட்டுவது, உற்சவ செய்வது, முதலிய காரியங்கள் செய்யப்படுவனவாகும்.

ஆகவே இப்படிப்பட்ட பிரார்த்தனை என்பதற்கு வேறு வார்த்தையில் ஒரு மாறுபெயர் சொல்லவேண்டுமானால் பேராசை என்றுதான் சொல்லவேண்டும். பேராசை என்றால் தகுதிக்கு மேல் விருப்புவது வேலை செய்யாமல் கூலி பெறுவது.

படித்துப் பாஸ் செய்யவேண்டியவன் பிரார்த்தனையில் பாஸ் செய்வது என்றால், பணம் வேண்டியவன் பிரார்த்தனையில் பணம் சம்பாதிக்கவேண்டுமென்றால், "மோக்ஷத்துக்கு" போகவேண்டும் என்கின்றவன் பிரார்த்தனையில் மோக்ஷத்துக்கு போகவேண்டும் என்றால், இவைகளுக்கெல்லாம் பேராசை என்று சொல்லுவதோடு வேலை செய்யாமல் கூலிகேட்கும் பெரும் சோம்பேறித்தனமும் மோசடியும் என்றும் சொல்வதுதான் மிகப்பொருத்தமாகும்.

பேராசையும் சோம்பேறித்தனமும் ஏமாற்றும் தன்மையும் இல்லாவிட்டால், பிரார்த்தனைக்கு இடமே இல்லை.

மற்றும் முன் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஆக பிரார்த்தனை செய்வதும் பிரார்த்தனையில் அவைகளை அடையப்பார்ப்பதும் முன் குறிப்பிட்ட சர்வ வல்லமை சர்வவியாபகம் உள்ள கடவுளை சுத்தமுட்டாள் என்று கருதி அதை ஏமாற்றச் செய்யும் சூக்ஷி என்று கூட சொல்லி ஆகவேண்டி இருக்கிறது.

எந்த மனிதனும் தகுதியானால் எதையும் அடையலாம்.

அதற்கு வேண்டிய காரியங்கள் செய்து தகுதியாக்கிக்கொண்டு பலனையடைய எதிர் பாராமல் காரியத்தை செய்யாது பிரார்த்தனையில் பலன் அனுபவிக்கவேண்டும் என்று கருதினால் கடவுள் வேலை செய்யாமல் கூலி கொடுக்கும் ஒரு அறிவாளி என்றும் தன்னைப்புகழ்வதாலேயே வேண்டியதைக் கொடுக்கும் ஒரு தற்புகழ்ச்சிக் காரனென்றும் தானே சொல்லவேண்டும்.

தவிர இந்த பிரார்த்தனையின் தத்துவமானது மனிதனை சோம்பேறியாக்குவதோடு சகலவித அயோக்கியத்தனமான

காரியங்களுக்கும் லைசென்சு அனுமதிச் சீட்டுக்கொடுப்பது போலாகிறது. விதை நட்டு தண்ணீர் பாய்ச்சாமல் அறுப்பு அறுக்க கத்தி எடுத்துக்கொண்டு போகிறவனுக்கும் யோக்கியமான காரியங்களைச் செய்யாமல் கடவுள் கருணையை எதிர்பார்ப்பவனுக்கும் என்ன வித்தியாசம் என்பது விளங்கவில்லை.

கடவுள் சகலத்தையுமுணர்ந்து அதற்கு தகுந்தபடி பலன் கொடுக்கக் கூடிய சர்வஞ்த்துவம் உள்ளவர் என்று ஒருவன் கருதி இருப்பானேயானால் அவன் கடவுளைப்பிரார்த்தனை செய்யும் வேலையில் ஈடுபடவோ அதற்காக நேரத்தை செலவு செய்யவோ ஒரு பொழுதும் துணியமாட்டான்.

ஏனென்றால் சகல காரியமும் கடவுளால் தான் ஆகும் என்று நினைத்துக்கொண்டு கடவுள் யாருடைய முயற்சியும் கோரிக்கையும் இல்லாமல் அவனவன் செய்கைக்கு எண்ணத்க்கும் தகுதிக்கும் தகுந்தபடி பலன் கொடுப்பதற்குத் தகுந்த ஏற்பாடும் செய்து விட்டார் என்றும் (அதாவது விதியின்படி தான் முடியும் என்றும்) தெரிந்து இருந்த ஒருவன் அந்த தெளிவில் நம்பிக்கை இருந்தால் பிரார்த்தனை செய்வானா என்று யோசித்துப்பார்க்கவேண்டுகிறோம்.

சாதாரணமாக மக்களில் 100க்கு 90பேர்களிடம் பிரார்த்தனை வெகு கேவலமான—அறிவற்ற வியாபாரத் தனமான முறையில் இருந்து வருகிறது.

அதாவது எனக்கு இன்ன பலன் ஏற்பட்டால் உனக்கு இன்ன காரியம் செய்கிறேன். அல்லது உனக்கு நான் இன்ன காரியம் செய்கிறேன். அதற்கு பதிலாக நீ இன்ன காரியம் எனக்குச்செய் என்கின்றமுறையிலேயே பிரார்த்தனை இருந்து வருகின்றது.

இவர்கள் எல்லோரும் அதாவது இந்தப் பிரார்த்தனைக் காரர்கள் எல்லோரும் கடவுளை புத்திசாலி என்றோ சர்வ சக்தி உள்ளவன் என்றோ பெரியமனிதத்தன்மை உடையவன் என்றோ கருதவில்லை என்று தான் சொல்லி ஆகவேண்டும்.

சிலர் சொல்லுகிறார்கள். மனிதன் பாபி, அவன் பாப கர்மத்தைச் செய்துதான் தீருவான். ஆதலால் மன்னிப்பு கேட்டுதான் தீரவேண்டும் என்கிறார்கள்.

நான் பாபம் செய்துதான் தீருவேன். நீ மன்னித்துதான் ஆகவேண்டும் என்று பிரார்த்திப்பதை கடவுள் ஏற்றுக்கொள்வதானால் மனிதன் எந்தப்பாவத்தை செய்வதற்கும் ஏன் பயப்படவேண்டும் என்பது நமக்கு புலப்படவில்லை. பாபத்துக்கு எல்லாம் மன்னிப்பு இருக்குமானால் புண்ணியம் என்பதற்கு அருத்தம்தான் என்ன?

ஆகவே கடவுள் கற்பனையை விட இந்த பிரார்த்தனை கற்பனையானது மிக மிக மோசமானதுஎன்றுதான் சொல்லவேண்டும். பிரார்த்தனைக்கற்பனை இல்லாவிட்டால் கடவுள் கற்பனை ஒரு பிரயோஜனத்தையும் கொடுக்காமல்போய்விடும்.

மனிதன் பூஜையும் பிரார்த்தனையும் செய்வதற்கு தான் கடவுள் எற்படுத்தப்பட்டதே ஒழிய கடவுளுக்கு ஆக பூஜையும் பிரார்த்தனையும் ஏற்படுத்தப்படவில்லை.

குரு-(பாதிரி) புரோகிதன் (பார்ப்பனர்) ஆகியவர்கள் பிழைப்புக்கு ஆகவே பிரார்த்தனையும் கடவுள் மன்னிப்பும் ஏற்படுத்தப்பட வேண்டியதாய் விட்டது.

இந்த இரண்டு காரியமும் இல்லாவிட்டால் பாதிரிக்கோ முல்லாவுக்கோ, புரோகிதனுக்கோ ஏதாவது வேலை உண்டா என்பதை யோசித்துப்பாருங்கள். ஆஸ்திகர்கள் கொள்கைப்படி மனிதனுடைய செய்கையும் எண்ணமும் "சித்திரபுத்திரனுக்கோ கடவுளுக்கோ, தெரியாமல் இருக்கவே முடியாது" இதற்கு ஆக பலன் கொடுக்க தீர்ப்பு நாளும் எமதர்ம ராஜாவும் இருந்தே இருக்கிறான்.

மத்தியில் பிரார்த்தனை பூசனை என்பது மேல்கண்ட இரண்டையும் ஏமாற்றவா அல்லது குருவும் புரோகிதனும், பிழைக்கவா என்பது யோசித்தால் விளங்காமல் போகாது.

பிரார்த்தனையில் செலவாகும் நேரத்தைப்போல் மனிதன் வீணாய்க்கழிக்கும் நேரம் வேறு இல்லை என்றே சொல்லுவோம். சில சோம்பேறிகள் பிழைப்பதற்காக மக்கள் புத்தி எவ்வளவு கெடுக்கிறது? மக்களுக்கு அயோக்கியத்தனம் செய்ய எவ்வளவு தைரியம் ஏற்பட்டு விடுகிறது? பொருள்கள் எவ்வளவு நாசமாகிறது? என்பவைகளையெல்லாம் யோசித்துப் பார்த்தால் பிரார்த்தனை என்பது ஒரு புரட்டான காரியம் என்றோ பயனற்ற காரியம் என்றோ அறிவீனமான காரியம் என்றோ விளங்காமல் போகாது.

# சமய ஆதாரங்களின் ஊழல்கள்.

டாக்டர் R. P. பராஞ்சிபை.

நமது சமய சம்பந்தமான கிரந்தங்கள் தெய்வீகத்தன்மை வாய்ந்ததெனவும், மகிமை வாய்ந்ததெனவும், சாக்ஷாத் ஈச்வரனுடைய அனுக்கிரகம் பெற்றவர்களாலும், அவரால் ஓதுவிக்கப்பட்ட புண்ணிய புருஷர்களாலுமே எழுதப்பட்டவையெனவும் கருதப்பட்டு வருகின்றன. எப்படி இருந்தபோதிலும் அவைகளுக்கு ஓர்வித மதிப்பையோ, அல்லது பெருமையையோ அளிக்காமல், சாதாரணமாகக் காணப்படும் மற்ற புஸ்தகங்களை எவ்வாறு நாம் கற்று, அவைகளை ஆராய்ச்சி செய்கின்றோமோ அவ்வாறே சமயப் புஸ்தகங்களையும் நாம் சாதாரணமாகக் கற்று, அவைகளை ஆராய்ச்சி செய்யக்கூடிய தைரியங்கள் நமக்கேற்படவேண்டும். அப்பொழுது தான் அப்புஸ்தகங்களில் காணப்படும் கவிகளினழகைக் கண்டு நாம் களிப்படைவதற்கும், அவைகளில் கூறப்பட்டிருக்கும் நீதிகளைத் தழுவி நடப்பதற்கும், அவைகள் போதிக்கும் உண்மைகளைப் போற்றிப்புகழ்வதற்கும் முடியும். அவ்வாறேதான், அதாவது மதப் புஸ்தகங்களை நாம் ஆராய்ச்சி செய்ய அனுமதிக்கப்படுவோமே யானால், அப்பொழுதுதான் அப்புஸ்தகங்களில் காணப்படும் ஆபாசமான கதைகளையும், அநாகரீகமான செய்கைகளையும், அசப்பாவிதப் பழக்க வழக்கங்களையும் நாம் கண்டிக்கலாம். மேலும் இவைகள் எல்லாம் மானிடர்கள் நாகரீக வாழ்க்கையின்றி மிருகப் பிராயமான வாழ்க்கையிலீடுபட்டிருக்கும் காலத்தில் காட்டுமிராண்டிகளெனக் கருதப்பட்ட சில கயவர்களாலும், சுயநலக் கூட்டத்தார்களாலுமேதான் எழுதப்பட்டவை எனவும் தைரியமாக எடுத்துரைக்க முடியும். ஆனால், இத்தகைய உணர்ச்சியோ தைரியமோ எதுவும் மக்களுக்கு அளிக்கப்படாமலிருந்து வருகின்றது.

## மதப்புத்தகங்கள் என்பவை.

"கடவுள் அருள் பெற்றவர்களாலும், கடவுள் தன்மை வாய்ந்தவர்களாலுமே தான் எழுதப்பட்டவைகள், கடவுளின் தன்மையையும், கடவுள் சக்தியையும், கடவுள் கட்டளை

களையுமே தான் அவைகள் தம்முள் அடக்கிக் கொண்டிருக்கின்றன. அவைகள் சம்பூர்ணமானவைகள், பரிசுத்தம் வாய்ந்தவைகள்; அவைகளில் கூறப்பட்டிருப்பவைகள் யாவும் உண்மையைத் தவிர்த்துப் பிறிதொன்றுமில்லை, மக்களின் சன்மார்க்க முறைகளுக்கு அவைகள் அஸ்திவாரமாக இருந்து வருவதுடன், மத சம்பந்தமான உண்மைகளுக்கு மூலபீடமாகவும் இருந்து வருகின்றன; மக்களின் வாழ்க்கைக்கும், முயற்சிக்கும், காரியங்களுக்கும் அவைகள் தான் பெரும் உதவி அளித்துக்கொண்டு வருகின்றன; பூலோக வாழ்க்கையில் மக்கள் ஆசைப்பட்டு, அகப்பட்டு, சிக்குண்டு, தத்தளியாது, பரலோக கைங்கரியங்களில் ஈடுபட்டு, மோட்சலோகத்தை யடைவதற்கு ஓர் வழிகாட்டியாகவும், ஊன்று கோலாகவும் அவைகள் இருந்துவருகின்றன.'' என்று நாம் போதிக்கப்பட்டுவருகின்றோம். நாம் நமது நடைமுறைகளிலும், உலகப் பழக்க வழக்கங்களிலும் நாள் தவறாது பார்த்துக் கவனித்துக் கொண்டு வரக்கூடிய விஷயங்களுக்கும், மேலே கூறப்பட்டிருக்கும் கூற்றுக்கும் கொஞ்சமும்சம்பந்தமென்பதின்றி அவைகள் முற்றிலும் ஒன்றுக்கொன்று அசம்பாவிதங்களாகவும் காணப்படுகின்றன. ஆகையால் தான் நடுநிலைமை வழுவாமல் ஆராய்ச்சி செய்பவர்களையும், அறிவுடையவர்களையும் அவைகளைத் தாக்கி நிர்மூலமாக்க நம்மை வற்புறுத்துகின்றது.

சைவர்கள் வைஷ்ணவ மத சம்மந்தமான புஸ்தகங்களை வாசிக்கும்போதும் அல்லது மகம்மதிய மத சம்மந்தமான புஸ்தகமாகிய குர் ஆனை வாசிக்குங்காலையிலும், அல்லது கிறிஸ்துமத சம்மந்தமான புஸ்தகமாகிய விவிலிய நூலை (பைபிளை) வாசிக்க நேர்ந்தாலும் அப்பொழுது அவர்கள், ''அப்புஸ்தகங்களில் காணப்படும் விஷயங்கள் யாவும், அசம்பாவிதமானவைகள், ஒருகாலத்திலும் நடைபெற்றிராதவை; அவ்வளவும் சுத்தப் பொய்யேயன்றி சிறிதேனும் உண்மையென்பது அப்புஸ்தகங்களில் மருந்துக்காகத் தேடினும் அகப்படாது; ஏனைய மதங்களைத் தூற்றவும், தங்கள் தங்களுடைய மதத்தைப்புகழ்ந்துரைக்கவுமே அவைகள் எழுதப்பட்டிருக்கின்றன; காலப் போக்கிற்காக மட்டிலும் அவைகளைப் படிக்கலாமே யல்லாது, மற்றபடி அப்புஸ்தகங்களைக் கற்பதால் பிரயோஜனமொன்றுமில்லை'' என்று கூறுகின்றார்கள். இவ்வாறேதான் வைஷ்ணவர்களும் முகமதியர்களும், கிறிஸ்துவர்களும் தங்கள் தங்களுடைய மத சம்பந்தமான புஸ்தகங்

களைத் தவிர்த்து ஏனைய மத சம்பந்தமான புஸ்தகங்களைப் பற்றிக் குறைகூறுகின்றார்கள். ஆனால் இவர்கள் யாவரும் ஒரே குரலுடன் தத்தம் மத சம்பந்தமான புஸ்தகங்களில் காணப்படுபவைகளை மட்டும் யாதொருவித சங்கோசமோ, சந்தேகமோ, ஆக்ஷேபனையோ, அல்லது கண்டனமோ இன்றி அவைகளை அப்படியே அங்கீகாரம் செய்து ஒத்துக்கொள்ளு வதுடன், அப்புஸ்தகங்களில் கூறப்பட்டிருப்பவைகளனைத் தும் உண்மையெனவும் கூறி வாதாடுகின்றனர். இவர்களு டைய அறிவுக்கு இதரமத புஸ்தகங்களில் உள்ள ஊழல் களும், குற்றங்களும், தோஷங்களும்தான் அகப்படுகின்றனவே யல்லாது, தங்கள் தங்களுடைய மதப்புஸ்தகங்களில் காணப் படும் ஊழல்களும், குற்றங்களும், தோஷங்களும், அசம்பா விதங்களும் அகப்படுவதேயில்லாதிருப்பதுடன், அவைகளில் கூறப்பட்டிருப்பவைகள் யாவும் உண்மையெனவும் கருதி வரு கின்றனர்.

நாம் யாவரும் இயற்கையாகவே கற்பனைக் கதைகளிலும் கட்டுக் கதைகளிலும் பரவசமடைகின்றோம். அவைகளின் வர்ணிப்புகளைக்கண்டு மயங்கிவிடுகின்றோம். அவைகளைப் படிப்பதற்கு எண்ணமும், ஆசையும் கொள்ளுகின்றோம். ஆதிகாலத்திய பழங்கதைகளை நாம் படிக்குந்தோறும், மக் களைச் சதாகாலமும் வாட்டிக்கொண்டுவரும் கேள்விகளாகிய 'நாம் எங்கிருந்து வருகின்றோம் நாம் எங்கு செல்கின்றோம்' என்பவைகளைக் குறித்து பல்வேறு மகான்களும் மகரிஷி களும் ஆராய்ந்ததாகவும், இக்கேள்விகளுக்கு அவர்கள் விடை தெரிந்துகொள்ளுவதற்காக வேண்டித் தங்களுடைய ஆயுட் காலம் முழுவதையும் செலவிட்டதாகவும், அக்காலங்களில் அவர்கள் தங்களுடைய சுகத்தைக் கவனியாது, பாமர மக்க ளின் இன்பத்திற்கும் சுகத்திற்குமாக வேண்டி அநேக கஷ்ட ங்களுக்கும், துன்பங்களுக்கும், இடையூறுகளுக்கும் ஆளாகிய தாகவும் நாம் அறிகின்றோம். ஆனால் இவர்களுடைய இம் மாதிரியான தியாகங்களினால் மக்களுக்குச் சாஸ்வதமான பிரயோஜனம் ஏதாயினும் உண்டா என்று கவனிப்போமா னால் அப்பொழுது எல்லாம் குதிரைக்கொம்பாக முடிந்திருப் பதையே நாம் பார்க்கின்றோம்.

இவர்களால், மக்களின் நன்மையைக் கருதி எழுதிவைத் திருப்பதாகக் கூறப்படும் கற்பனைக்கதைகள் யாவும் ஓர் வித நம்பிக்கையாலும், பயத்தாலும், இன்பத்தாலுமே சிருஷ்டிக்

கப்பட்டு, மக்கள் ஜனனத்திலிருந்து மரணவாயிலையடையும் வரையிலும் அவர்களுடைய ஜீவியத்தில் அவர்களுக்கேற்படும் பல்வேறு இன்பங்களையும், துன்பங்களையும் தழுவி எழுதியிருப்பதாகக் காணப்படுகிறது. இவர்கள் இவ்வளவோடுதான் நின்றார்களாவென்று கவனிப்போமானால், அதுவும் இல்லை. தங்களைப் படைத்ததாகவும், பிறப்பித்ததாகவும், இவர்களால் கருதப்பட்டு வரும் கடவுள்களும், மக்களுக்குள் சகஜமாகவே உண்டாயிருக்கக் கூடிய பேதாபேதங்கங்களும், குணதோஷங்களும், விகற்பங்களும் உண்டு என்று பறைசாற்றிவிட்டார்கள். மேலும், இவர்களால் பாவிக்கப்பட்டு வரும் கடவுளுக்கு வாயுவும் அலைகளுந்தான் சங்கீத கருவிகளெனவும், சங்கீதமெனவும் கற்பிக்கப்பட்டதோடு, ஏரிகளிலும், நதிகளிலும், ஊற்றுகளிலும், மலைகளிலும், வனங்களிலும், கம கமவென வாசனை வீசக்கூடிய எல்லா இடங்களிலும் அக்கடவுள் வாசம் செய்வதாகவும் மக்களுக்குப்போதித்துவிட்டனர். (ஒருக்கால் இதையுத்தேசித்துத்தான் கோவில்களிலும், சாமி கும்பிடும் அறைகளிலும் சாம்பிராணியைப் புகைத்துக் கற்பூரத்தையும், ஊதுவத்திகளையும் கொளுத்திப் புஷ்பங்களால் உருவங்களை அலங்கரித்து, வாசனையையளிக்கத்தக்க எண்ணெய்களுடன் சந்தனத்தைக் கரைத்துச் சாமிகளின்பேரிலும், அறைகளிலும் வாரியிறைக்கின்றார்கள்போலும்! இவர்களால் சிருஷ்டிக்கப்பட்ட இக்கதைகள் யாவும் பொய்யாகவோ அல்லது கட்டுக்கதைகளாகவே இருந்தபோதிலும், அவைகள் மிக அழகாகவே அவர்களால் வர்ணித்துக் கூறப்பட்டிருக்கின்றமையால் அநேக காலங்களாக அவைகள் மக்களுக்கு ஓர்வித உற்சாகத்தையும், ஊக்கத்தையுமளித்து அவர்களுக்கு ஓர் தூண்டுகோலாகவுமிருந்து கொண்டேவந்திருக்கின்றன. ஆனால் இக்கதைகளில் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் யாவும் உண்மை தானெனவும், கடவுளாலும், கடவுள் அருள் பெற்றவர்களாலும், கடவுள் தன்மை வாய்ந்தவர்களாலுமே அவைகள் எழுதப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றன; அக்கதைகளை ஒருவன் சந்தேகித்தாலோ, அல்லது மறுத்தாலோ அவன் ஏழேழு தலைமுறையும் ரௌரவாதி நரகத்திற்கேதான் ஆளாவான் என உரைத்து, மக்கள் பயமுறுத்தப்பட்டிருக்கின்றனர். ஆதலால் அக்கதைகள் எவ்வளவு அழகாக வர்ணித்துரைக்கப்பட்டிருந்த போதிலும் கூட, அவைகள் தங்களுடைய அழகை இழந்து, மக்களுடைய மனத்தில் ஓர்வித பயத்தை யுண்டாக்கி விடுகின்றன. மக்களும் ஓர்வித பயத்தினால்தான் அவைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்தவர்கள் போலவும், நடக்கின்றவர்

கள் போலவும் காட்டிக்கொள்ளுகின்றார்களேயல்லாது, அக்க தைகளை வாசிப்பதால் அவர்களுக்கு உண்டாகும் பக்தியும், அறிவும் தான் அவர்களுடைய ஒழுக்கிற்கும், கட்டுப்பாட்டிற் கும் காரணமாயிருப்பதாகக் காட்டிக்கொள்வதில்லை. இத்த கைய பயங்களாலும், பீதிகளாலும் மக்களுடைய மனது பா திக்கப்படுவதால் அக்கதைகளின் அருமையும், பெருமையும் குலைவதோடு, அவைகளின் அழகும் குன்றி விடுகின்றன; ஆதலால்தான் அறிவுடையோரும், ஆராய்ச்சியுள்ளோரும், தைரியமுள்ளோரும் அவைகளை வெறுத்து ஒதுக்கித்தள்ளி வருகின்றார்கள்.

அறிவு இயக்கமானது பொதுவாக உலகிற்கும், குறிப் பாக நமது இந்தியாவுக்கும் உண்மையான விடுதலையையும், சுதந்திரத்தையும் அளிப் பதற்காகவும், நமது மக்களின் அறிவை வளர்ப்பதற்காகவும், அறியாமையாலும், பயத்தாலும் மக்களின் மனதில் தோன்றி யிருக்கும் தப்பெண்ணங்களையும், மதிமோசங்களையும் நிர் மூலமாக்கவும், ஆதிகாலத்திலிருந்து மக்களால் அனுஷ்டிக்கப் பட்டுவரும் குருட்டுத்தனமான தெய்வவழிபாடுகளை நிர்த் தூளியாக்கவும், இறந்துபோனவர்கள் எவ்வளவுதான் பெரிய மனிதர்களாக இருந்தபோதிலும் சரி, அவர்களைக் கும்பிடுவ தால் மக்களுக்கு நன்மைகளொன்றுமேற்படாதென்பதை விள க்கிக் காட்டவும், நமது கண்களுக்கெதிரில் உலகில் டமாடும் ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும் உதவி புரிதலே சாலவும் சிறந்ததாகுமென்பதை மக்களுக்கெடுத்து உபதேசம் செய்ய வும், மக்கள் இவ்வுலக வாழ்க்கையில் அனுபவிக்கும் இன்பங் கள் யாவும் பாவகிருத்தியங்களாகாதென்பதை நிலைநாட்ட வும், துன்பங்களும் கஷ்டங்களுமேதான் கடவுளுக்கு அத்திய ந்த இன்பமென்பதை மூடமக்களுடைய மனத்திலிருந்து அற வே நீக்கவும், அறிவு வளர்ச்சியானது குற்றமாகாதென்பதை நிரூபிக்கவும், பேடித்தன்மையும், பயங்காளித் தன்மையும் நற் குணங்களுக்குரிய அறிகுறிகளாகாதென்பதை விளக்கிக் காட் டவும், மக்களுக்கு விமோசனமேற்படவேண்டுமானால் அவர் களுக்கு ஓர்வித திடமான கடவுள் நம்பிக்கை இருக்கவேண்டு மென்கிற எண்ணத்தை நாசமாக்கவும், இவ்வுலக வாழ்க்கை யில் நாம் துன்பங்களையும், கஷ்டங்களையும் அனுபவித்தால் அடுத்த உலகில் மோட்சத்தில் இன்பங்களையும், சந்தோஷங்க ளையும் தவறாதனுபவிப்போமென்கிற மனப்பான்மையை மக் ளின் எண்ணங்களிலிருந்து அடியோடொழிக்கவும், மக்களுக்

குள்ளேற்பட்டிருக்கும் பாகுபாடுகளையும், உயர்வு தாழ்வுகளையும்அறவேநீக்கி, சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் வளர்ப்பதாகவும், நாம் மோக்ஷ உலகம் செல்லவேண்டுமென்றால் ஓர் புரோகிதரோ அல்லது ஓர் மதகுருவோ நமக்கு வழிகாட்டியாக இவ்வுலகிலிருந்து உதவி செய்துகொண்டே வரவேண்டுமென்கிற ஓர் வித எண்ணத்தை மக்களின் மனத்திலிருந்து அறவே அகற்றவுமேதான் பாடுபட்டு வருகின்றது. இவைகளேதான் அவ்வுயரிய இயக்கத்தின் அடிப்படையான கொள்கைகளாகும்.

ஒவ்வொரு புஸ்தகத்தையும், ஒவ்வொரு மதத்தையும், ஒவ்வொரு ஜாதியையும், ஒவ்வொரு வகுப்பையும், ஒவ்வொரு பிரமாணத்தையும், ஒவ்வொரு கோட்பாட்டையும், ஒவ்வொரு மேற்கோளையும், ஒவ்வொரு மனிதனும் ஆராய்ச்சி செய்வதற்கு சர்வ சாதாரணமாக அனுமதிக்கப்படும் வரையிலும், அத்தகைய சாதனங்களேற்படும் வரையிலும், உலகம் சுதந்தரத்துடனிருப்பதாகவாவது, அல்லது விடுதலையடைந்துவிட்டதாகவாவது கூறிவிட முடியாது. மக்கள் தங்களுடைய மனத்தில் உதிக்கும் எண்ணங்களையும், அபிப்பிராயங்களையும் வெளிப்படையாகவும் தைரியமாகவும், எடுத்துக் கூறவும், அவர்களுக்கு நியாயமெனத் தோன்றும் துறைகளில் அவர்கள் சிறிதும் பயமின்றிப் பிரவேசிக்கவும், அவர்களுடைய பிரியம்போல் நடக்கவும் சாதனங்கள் ஏற்படும் வரையிலும் அவர்கள் அடிமைகளேயாவார்கள். பல்வேறு மதத்தினரும், வகுப்பினரும், ஜாதியினரும் தத்தம் பேதங்களை விடுத்து யாவரும் ஒரு குடும்பத்தில் உற்பவித்த சகோதரர்கள் போலவும் ஒருவரையொருவர் நேசித்து அளவளாவி, இன்புறத் தழுவிக் கொள்வார்களேயானால் அப்பொழுது நமது இந்த உலகமானது ஓர் "சுவர்க்கம்" போலவே விளங்கும். நமக்கு நிச்சயமாகவும், உண்மையாகவும் தெரியாத ஒன்றைக் குறித்து நாம் ஒருவருடன் ஒருவர் போராடியும், வாதாடியும், ஒருவரையொருவர் பகைத்தும், வெறுத்தும், ஒருவரையொருவர் கொலை செய்தும் உயிர்வாழ்வதை நோக்க உண்மையாகவே நமக்குப் பேராச்சரியமாக இருக்கின்றது. பல்வேறு மதங்களைக் குறித்தும் மக்களுக்கேற்படும் அபிப்பிராய பேதங்களினால் மக்கள் ஒருவரையொருவர் சிறைப்படுத்தியும், அடிமைப்படுத்தியும், தூக்கிலிட்டும், கொலை செய்தும், நெருப்பிலிட்டு வாட்டியும் ஏன் கொடுமைப்படுத்தி வருகிறார்களென்பது நம்மால் அறிந்துகொள்ள முடியவேயில்லை. நாமோ, "அன்பே சிவம்" எனவும், "சிவமே அன்பு" எனவும் போதிக்கப்

பட்டிருக்கின்றோம். அப்படியிருந்தும் சைவ சம்பந்தமான புராணங்களில் காணப்படும் அட்டூழியங்களுக்கும், கொலைகளுக்கும் கணக்கேயில்லை. சைவர்களின் இத்தகைய இழி செயலை இன்றும் நாளையும் மதுரையில் "சமணர்களைக் கழுவேற்றிய உற்சவம்" என ஓர் உற்சவத்தை குறித்த ஓர் மாதத்தில் கொண்டாடிக்கொண்டும் வருகின்றார்கள். இவ்வாறேதான் ஒவ்வொரு மதஸ்தர்களும் அன்னிய மதஸ்தர்களைத் துன்புறுத்திக்கொண்டே வாழ்ந்துவந்திருக்கின்றார்கள். இவைகளுக்குப் போதிய சான்றுகளும் இல்லாமலில்லை. கடவுள் நம்பிக்கையுள்ள ஒருவர்—ஆஸ்திகர்—கடவுள் நம்பிக்கையில்லாத ஒருவரை—நாஸ்திகரை—ஏன் பகைக்கவேண்டும்? நாஸ்திகரினால் கடவுளுக்கு ஒருவித ஆபத்தோ, துன்பமோ கஷ்டமோ அல்லது நஷ்டமோ நேரிடப்போவதில்லை. அவரால் அவருடைய பெருமையும் குன்றிவிடப்போவதில்லை. நாஸ்திகனோ எல்லோரையும் போல் ஒரு மனிதன்தான். மேலும், அவனுக்கு மற்றவர்களுக்கிருப்பதுபோலவேதான் இன்பமும் துன்பமும், சுகமும்—கஷ்டமும் ஆனந்தமும்— துக்கமுமிருக்கின்றன. அவன் மனிதனாக இருப்பதால், மனிதவர்க்கத்திற்குரிய எல்லாவித உரிமைகளும் சுதந்தரங்களும் அவனுக்குமுண்டு. இத்தகைய நாஸ்திகர்களை நாம் வெறுக்காமலும், பகைக்காமலும், அவர்களுடன் போராடாமலும், அவர்களைக் கொலை செய்யாமலும், அவர்கள் நம்மிடம் நடந்துகொள்வது போல நாம் அவர்களிடம் நடந்துகொண்டும், நம்மை அவர்கள் நடத்துவதைப்போல நாம் அவர்களை நடத்திக்கொண்டும் வருவதால் நமக்கு ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களென்ன? நாம் நம்முடைய மதஸ்தர்களையும், வகுப்பினர்களையும், ஜாதியினர்களையும் நடத்திவருவது போல் நாஸ்திகர்களையும் கருணையுடன் நடத்திவருவது சிலாக்கியமாயும், மேன்மையாகவுமிராதோ? சகோதரர்களே! யோசியுங்கள்.

ஒவ்வொரு மதஸ்தர்களும் தங்கள் தங்களுடைய விரோதிகளையும், சத்துருக்களையும் நேசித்துச் சினேகிப்பதாகவேதான் சொல்லுகின்றார்கள். ஆனால், நாம் அவர்களை வேண்டிக்கொள்வது யாதெனில் அவர்கள் யாவரும் அவர்களுடைய விரோதிகளை நேசிக்கவேண்டுமென்பது மல்ல அவர்களுடைய அபிப்பிராயங்களினின்றும், எண்ணங்களினின்றும் மாறுபட்டவபிப்பிராயங்களுடையவர்களையும் இயற்கையானநேர்மையுடன், அதாவது மனத்தில் ஒருவிதமான துவேஷமுமின்றி

நடத்தவேண்டுமென்பதேயாகும். நாம் அயலாருடைய குற்றங்களையும், அயலார் மன்னிக்கத்தயாராயில்லாதிருக்கும் பொழுது நம்முடைய தப்பிதங்களையும், குற்றங்களையும் அயலார் மன்னிப்பார்களென்று நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியுமென்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

மக்கள் யாவரும் தங்கள் தங்களுடைய மனோபாவனைப்படி தங்களுக்கு எது உசிதமெனத் தோன்றுகின்றதோ அவ்வாறு நினைப்பதற்கும் அபிப்பிராயங் கொள்வதற்கும் எல்லாருக்கும் சமவுரிமையும், சம சுதந்திரமும் உண்டு எனக்கருதுவார்களேயானால், அப்பொழுது இப்பிரச்சினையானது சாஸ்வதமாக முடிந்துவிட்டதுபோலவேயாகும். ஆனால் செல்வாக்குள்ள மடாதிபதிகளிருக்கும் வரையிலும், ஒழுங்கும், கட்டுப்பாடுமுள்ள மதக்குருக்களும், புரோகிதர்களுமிருக்கும் வரையிலும், மோக்ஷத்திற்கோ, அன்றி நரகத்திற்கோ, மக்களுக்கு டிக்கட்டுகள் கொடுத்து அவர்களை அவ்வுலகங்களுக்கு அனுப்பக்கூடிய வல்லமையும் சக்தியும், அதிகாரமும் தங்களொருவருக்குத்தான் உண்டென்று கூறி இவர்கள் மக்களை ஏமாற்றிப் பாசாங்கு செய்துகொண்டுவரும் வரையிலும், சுயேச்சையான அபிப்பிராயங்களும், எண்ணங்களுமுடைய ஒருவனை 'கீழ்மகன்' எனவும் 'ஆசாரஹீனன்' எனவும், 'ஜாதிகெட்டவன்' எனவும் உரைத்தவனைச் சமூகபகிஷ்காரம் செய்துகொண்டுவரும் வரையிலும், தங்களுடைய உத்தரவுகளுக்கும், கட்டளைகளுக்கும், கீழ்ப்படியாதிருக்குமொருவனைக் குற்றவாளியெனவும், அபராதத்திற்குரியவனெவும் தீர்ப்புகள்கூறிக் கொண்டு வரும்வரையிலும், உலகத்தில் துன்பங்களும், கஷ்டங்களும், வருத்தங்களும், விரோதங்களும், வன்மங்களும், பகைகளும் தாண்டவமாடிக்கொண்டேதானிருக்கும். மனிதர்களை பகைத்துகடவுளை வணங்கி, வழிபாடுசெய்யவேண்டுமென்கிற கொள்கைதான் எல்லா மதங்களினுடைய முக்கிய தத்துவார்த்தம்போல் காணப்படுகின்றது.

எல்லாத் தேசங்களிலும் நடைபெற்றுக்கொண்டு வந்த சம்பவங்கள்தான் நமது நாட்டிலும் நடைபெற்று வந்தன. ஏதாவது ஒரு மதம் புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்டால் உடனே அறிவாளிகளும், அதிகாரத்திலிருப்பவர்களும், அதாவது மதகுருக்களும், பணக்காரர்களும் அதாவது அரசர்களும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு தங்களுடைய மதமானது கடவுளாலேயே தங்களுடைய முன்னோர்களுக்களிக்கப்பட்டதெனவும்,

மற்ற எல்லா மதங்களும் பொய்யெனவும், அபத்தமெனவும், தங்களுடைய உண்மையான மதத்தை நம்புகின்றவர்கள் மட்டும்தான் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கமுடியுமெனவும், அவ்விதம் நம்பாதவர்கள் யாவரும் எப்பொழுதும எரிந்து கொண்டே இருக்கும் அக்கினியில்தான் தள்ளப்படுவார்களெனவும், அறியாமையிலும், அந்தகாரத்திலும், மூட பக்தியிலும், நிறைந்துள்ள மக்களிடம்-அதாவது பாமர மக்களிடம் பிரசாரம் செய்துவந்தார்கள். மக்களை அடக்கி ஆளுவதற்காகவேண்டி—அதாவது மக்கள் தங்களுக்கு உதவி அளித்துக்கொண்டே வருவதற்சாக வேண்டி—மதக்குருக்களும், பணக்காரர்களும், அதாவது அரசர்களும், ஒன்றாகச்சேர்ந்து கொண்டு தங்களுடைய மதம் ஒன்றுதான் மிக்க பரிசுத்தம் வாய்ந்ததெனவும், போற்றுவதற்கும், புகழ்வதற்கும், கொண்டாடுவதற்கும் தகுதி வாய்ந்ததெனவும், தெய்வாம்சமும், தெய்வ கருணையும் நிரம்பியுள்ளதெனவும் உரைத்து, மக்களை ஏமாற்றி, அவர்களுக்குத் துரோகம் செய்துகொண்டுவந்ததுமல்லாமல் அவர்களுடைய மதப்புஸ்தகங்களிலுள்ள வாக்கியங்களை ஒருவன் மாற்றினாலும் அல்லது புதிதாக ஒன்று அப்புஸ்தகத்தில் சேர்த்தாலும் அவன் இவ்வுலகில் கண்டிக்கப்பட்டு நெருப்பிலிட்டுக் கொளுத்தப்படுவதுமல்லாமல்லாமல், அடுத்தவுலகிலும் அவன் கடவுளால் அவ்வாறே தண்டிக்கப்பட்டு இம்சைக்குள்ளாவானெனவும் பறைசாற்றி வந்தனர். மக்கள் தங்களுடைய கொள்கைகளினின்றும் மாறாதிருக்கவேண்டுமென்பதே மதக்குருக்களினுடையவும், பணக்காரர்களுடையவும் எண்ணமென்பதும், அதுவே அவர்களுடைய முடிவான அபிப்பிராயமென்பதும் இதனால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது. இவர்களுடைய இத்தகைய கூட்டுச் செய்கையாலேற்பட்ட பலனுமதுவேயாகும். ஆனால் நாளாவட்டத்தில் சில மத புரோகிதர்களின் அறிவு விசாலமடைந்து, மக்கள் முன்னேறிச்செல்வதற்கான துறைகளில் அவர்கள் ஈடுபடவேண்டுமென விரும்பியபொழுது பாமர மக்களோ அவர்களை இடையே மறித்து அவர்களுடைய மாற்றத்திற்கு முட்டுக்கட்டையிடலானார்கள். ஏனெனில் அவர்களுடைய மனமாற்றத்தை மக்கள் விரும்பவில்லை. பாமர மக்கள் முதலாவ[illegible] புரோகிதர்களால் வஞ்சிக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்[illegible]கள். ஆனால் பிறகோ அந்தப்பாமர மக்களே அவர்களுடைய எஜமானர்களாக விளங்கினார்கள்.

மடாதிபதிகளையும், மத குருமார்களையும், மத புரோகிதர்களையும் இத்தகைய நிலைமையிலிருந்து விடுவிக்கவேண்டுமென்றுதான் அறிவு அல்லது சுயமரியாதை இயக்கமானது பாடுபடுகின்றது. சுயமரியாதை இயக்க அன்பர்கள் பலரும் மேற் கூறப்பட்டவர்களின் சினேகிதர்களேயல்லாது அவர்களுடைய விரோதிகளல்ல. சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி அவர்கள் என்னதான் திரித்துக்கூறி விஷமப்பிரசாரம் செய்துகொண்டுவந்தபோதிலும் கூட, இவ்வியக்கமானது அவர்களுக்குச் சாஸ்வதமாகவும் நீடித்துமிருக்கக்கூடிய ஓர் மகத்தான ஊழியத்தைச் செய்யத்தான் போகின்றது. அவர்களோ சுயேச்சையுடனும் சுதந்தரத்துடனும் ஏதாயினும் ஒன்றைக் கற்று ஆராய்ச்சி செய்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களுக்குச் சிறு வயதில் போதிக்கப்பட்டவைகளைத்தான் தங்களுடைய வாழ்க்கையில் அவர்கள் ஓர் கிளிப்பிள்ளையைப் போன்று மனப்பாடம் செய்து ஒப்புவிக்கின்றார்கள். அவர்களுக்குக் கற்றுக்கொடுத்த மந்திரங்களைச் சிறிதும் தப்பிதமின்றியோ அல்லது ஏதோ ஒரு சில தப்பிதங்களுடனோ யார் ஒருவர் வேதகோஷ்டம் செய்கின்றார்களோ அவர்களேதான் தேர்ந்த அறிவாளிகளெனக் கருதப்படுகிறார்கள். பல்லாயிர வருடங்களாக இம் முறையேதான் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அர்த்தமற்ற சடங்குகளை இவர்கள் புரிந்துகொண்டே வந்ததனால்தான் இவர்களுக்கும், இவர்களைப்பின்பற்றிய பாமர மக்களுக்கும் சுய அறிவு என்பதோ அல்லது சுய ஆராய்ச்சி என்பதோ நாளாவட்டத்தில் இல்லாதொழிந்தது. மேலும் மதப்புஸ்தகங்களை ஆராய்ச்சி செய்வதென்பது ஓர் கொடிய பாவ கிருத்தியமாகுமென இவர்களுக்கு இளவயதிலேயே போதிக்கப்பட்டிருக்கின்றமையால் இவர்கள் அத்தகைய செய்கைகளில் காளதுவரையிலும் ஈடுபடுவதற்கில்லை. பழய மதக் கொள்கைகளையும், ஆசார அனுஷ்டானங்களையும்தான் இவர்கள் பின்பற்றவேண்டுமென அறிவிக்கப்பட்டிருப்பதுடன், அவைகளுக்கு மாறாக நடந்தால் அப்பொழுது அவர்களுடைய கொள்கை மக்களின் சன்மார்க்க முறைகளுக்கு ஓர் தொத்துவியாதிபோலாகுமெனவும்போதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு மத குருவும் மத புரோகிதரும் தங்களுடைய குறித்த ஓர் மதத்திற்காக வக்காலத்து வாங்கியிருக்கின்றார்கள். ஆகையினால் அவர்கள் தங்களுடைய வாதத்தை உண்மையாகவே நடத்துவார்களென எதிர்க்கப்படுகின்றார்கள். இவர்களுக்குப் போதிக்கப்பட்டவைகளுக்கு விரோதமாக நடக்க எப்பொழுதாயினும் இவர்கள் முயற்சி செய்வார்களேயா

லால், அப்பொழுதே அவர்கள் துரோகிகளெனக் கூறப்பட்டு பல இழி சொற்களுக்கும் ஆளாகி, அவதூறாகப் பேசப்பட்டு, பகிஷ்காரமும் செய்யப்படுகின்றார்கள். ஒவ்வொரு மதகுருவும் தன்னுடைய கொள்கைகளிலிருந்து எக்காரணத்தைக் கொண்டும், எக்காலத்திலும் மாறுவதில்லையென ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளுகின்றான். இவ்வாறு ஒப்பந்தம் செய்து கொள்ளுவதால் அவன் புதிய விஷயங்களை ஆராய்ச்சி செய்ய விரும்புவதில்லை. அப்படி ஒருக்கால் ஆராய்ச்சி செய்ய நேரிட்டாலும் அவன் அவைகளை ஒத்துக்கொள்ளுவதுமில்லை. இந்த நிலைமையில்தான் நமது மத குருக்களென்பவர்கள் தற்காலம் இருந்துகொண்டு வருகின்றார்கள். இவர்களுடைய இத்தகைய பரிதாபகரமான நிலையைக்கண்டுதான் சுயமரியாதை இயக்கத்தார் அவர்கள்மீது பச்சாதாபப்படுகின்றார்கள். அவர்களுடைய அத்தகைய நிலைமையிலிருந்து அவர்களை விடுவிக்கவேதான் சுயமரியாதை இயக்கமும் பாடுபடுகின்றது.

சில மத குருக்கள் தங்களுடைய கட்டுப்பாடுகளினின்றும் விடுவித்துக்கொண்டு, தங்களுடைய சுய அறிவுடன் வாழ வேண்டுமென்கிற தைரியமுடையவர்களாகவே காணப்படுகின்றார்கள். ஆனால் பெரும்பான்மையானவர்கள் தங்களுடைய ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டுத்தான் தீரவேண்டுமென வற்புறுத்தப்படுகின்றார்கள். இவர்கள் எக்காரணத்தைக்கொண்டும் தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களையாவது அல்லது எண்ணங்களையாவது வெளியிடவே கூடாது. ஆனால் தங்களுக்குப் போதிக்கப்பட்டிருப்பவைகளை மட்டும் தைரியமாகவும், தாராளமாகவும், வெளிப்படையாகவும்உரைக்கலாம். தங்களுடைய மனத்தில் உதிக்கக்கூடிய சந்தேகங்களைக்கூட இவர்கள் உரைக்கக்கூடாது. ஆனால் மக்கள் அறியாமையிலும், அந்தகாரத்திலும், மூட பக்தியிலும் மூழ்கியிருந்தகாலத்தில் இவர்களால் இயற்றப்பட்ட அக்குறுகிய பாதையிலேயேதான் இவர்கள் செல்லவேண்டும். அப்பாதையின் இரு ஓரங்களிலும் நிழலையளிப்பதற்கு மரங்களோ நட்டப்படவில்லை. அவர்களுடைய அக்குறுகிய, நிழலற்ற பாதையில் அவர்கள் செல்லும்பொழுது தங்களுக்கு இரு பக்கங்களிலும் உள்ள வயல்களையாவது, தோட்டங்களையாவது அவர்கள் பார்க்கவே கூடாது. மேலும், தங்களுடைய கண்களுக்குப்

புலப்படும் வனங்களின் காட்சியையாவது, அல்லது குன்று களின் அழகையாவது அவர்கள் கவனிக்கவேகூடாதென்பது டன், அக்குன்றுகளிலிருந்து ஓடிவரும் சிறு அருவிகளின் சப் தத்தையும் அவர்கள் சிறிது நேரம் நின்று கேட்கவும்கூடாது. புழுதி நிறைந்த அக்குறுகிய பாதையிலேதான அவர்கள் செல் லவேண்டும். 'மோக்ஷம்,' 'நரகம்,' "விமோசனம்" "விடு தலை", "மறுஜன்மம்" என்பவைகளைப்பற்றியேதான் இவர் கள் ஆராய்ச்சி செய்துகொண்டு, அந்தப்பாதையில் தான் சென்றுகொண்டிருக்கவேண்டும். ஆனால் மேற்கூறிய இப் பெரிய கேள்விகளுக்கு, இவர்களே புதிதாக ஓர் தத்துவார்த் தத்தையும் கண்டுபிடிக்கக்கூடாது. நம்பிக்கையற்றவர்களும், மதகுருக்களைப் பரிகாசம் செய்தவர்களும், ஆசார அனுஷ் டானங்களை கைகழுவவிட்டவர்களும் அனுபவித்த இடுக்கண் களையும், துன்பங்களையும், கஷ்டங்களையும் ஒன்றுக்குப்பத் தாகப் பெருக்கி எவ்வளவுக்கெவ்வளவு வர்ணித்துரைக்கின் றார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் சிரேஷ்டமானவர் களெனப் பாவிக்கப்படுகின்றார்கள். இந்த ஜென்மத்தில் துன் பத்தை அனுபவிக்கின்றவர்கள் மறு ஜன்மத்தில் இன்பத்தை அனுபவிப்பார்களெனவும்,இந்த உலகத்தில் இன்பத்தை அனு பவிப்பவர்கள் அந்த உலகத்தில் துன்பத்தையே அனுப விப்பார்களெனவும், கடவுள் யாரை விசுவாசித்து, தனது கிரு பா கடாட்சத்தையளிக்கின்றாரோ அவர்கள்தான் இந்த உல கத்தில் துன்பத்தையும், கஷ்டத்தையும் அனுபவிப்பார்களெ னவும், கடவுள் யாரை வெறுத்துப் பகைக்கின்றாரோ அவர் கள்தான் இவ்வுலகில் சகல ஐஸ்வரியங்களுடன் கூடிய குபேர வாழ்க்கையை நடத்தி இன்பத்தையும், சந்தோஷத்தையும் இடைவிடாது அனுபவித்துக்கொண்டு வருவார்களெனவும், கடவுள் யாரை அதிகமாக நேசித்து விரும்புகின்றாரோ அவர் களைத்தான் இவ்வுலக வாழ்க்கையில் பல சோதனைகளுக்கு முட்படுத்தி, துன்புறுத்திக்கொண்டே வருவாரெனவும்ஆனால் அடுத்த உலகில், அதாவது மோக்ஷத்தில் அவர்கள் இவ்வுல கில் அனுபவித்த துன்பங்களுக்கு ஈடாக எப்பொழுதும் இன்பத்தையும், சந்தோஷத்தையும் அனுபவித்துச் சதா கடவு ளருகிலேயே வீற்றிருப்பார்களெனவும், இவ்வுலகில் குபேர சம்பத்துடன் வாழ்ந்து எவ்வித சுகபோகங்களையும் அனு பவிக்கின்றவர்கள் அடுத்த உலகில் அதாவதுமறுஜென்மத்தில் அவ்வளவுக்கவ்வளவு துன்பத்தையும், கஷ்டத்தையும்தான் அனுபவிப்பார்களெனவும், துன்பமும், கஷ்டமும், வருத்தமு மேதான் நமக்கு மோட்ச உலகத்திற்கு வழிகாட்டிகளென

# ருஷிய விவாகம்.

சோவியத் ருஷியாவின் தற்கால சரித்திரம், பொருளாதாரத்துறையிலும் சமூகத்துறையிலும் பரீக்ஷார்த்தமாகச் செய்யப்பட்டுவரும் காரியங்கள் என்றாலும் அவை உலகத்திலே பெரும் மாறுதலை உண்டுபண்ணி வருகிறது. உண்மையாகவே, ஒரு நாகரீகமான ஜன சமுதாயத்தை சிருஷ்டிப்பதில் இப்பூவுலகின் கண் விளங்கும் ருஷியாவைப்போல் வெற்றிகரமாகவும் ஊக்கத்தோடும் செய்து வரும் நாடு வேறு எதுவும் இல்லையென்றே சொல்லலாம்.

இன்று சோவியத் ருஷியா மதமில்லாமலும், தொழிலில் உயர்வு தாழ்வு இல்லாலும், ஆண் பெண் என்ற பேதமின்றியும் அவரவர்களுக்கு பூரண சுதந்திரம் அளிக்கத்தக்கதான ஒரு சமூகத்தை சிருஷ்டிக்கிறது.

கடந்த 20 ஆண்டுகளாக அந்நாட்டில் நடந்த மாற்றங்களில் குடும்ப வாழ்க்கையில் விவாகம் சம்பந்தமான மாறுதலே யாவரையும் திடுக்கிடச் செய்யக் கூடியதாகும்.

---

வும் அவர்கள் கண்டிப்பாய் மக்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும்.

நாம் மேலே கூறிக்கொண்டுவந்த விஷயங்கள் எவ்வளவுதான் அபத்தமானவைகளெனக் காணப்பட்டபோதிலும் கூட அவைகள் கண்டிப்பாக மக்களுக்குப் போதிக்கப்பட்டாகத் தான்வேண்டும்; அவைகளை நம்பியுந்தான் தீரவேண்டும். யாதொருவித மேற்கோளோ, அல்லது பிரமாணமோ, அல்லது சந்தேகமோ இல்லாமலும், அல்லது சில சமயங்களில் அவைகளொன்றுமே இல்லாவிட்டாலுங்கூட அவர்கள் உரைப்பதை மறுத்துரைக்காமலும், எதிர்த்து வாதாடாமலும் அப்படியே, அவ்வளவையும் எவனொருவன் உண்மையென நம்புகின்றானோ அவனேதான் உண்மையான பக்தியுள்ள மனிதன் எனக் கருதப்படுகின்றான்.

---

அஃது என்னவெனில், ஆண் பெண் இருபாலர்களும் தங்கள் வாழ்க்கைத் துணைவர்களை தெரிந்தெடுப்பதிலும் அது சம்பந்தபட்டவிவகாரங்களிலும் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சுதந்திரங்களும், அது சம்மந்தமாய் ஏற்பட்டிருந்த தடைகளை களைந் தெறிந்தவைகளுமேயாகும்; அவர்கள் தாங்களாகவே தீர்ப்பு செய்து கொள்ளலாம்.

ஜகத்தனிலே பெண்கள் விடுதலையடைந்திருக்கிறார்கள் என்றால் அது ருஷியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இல்லையென்றே தைரியமாகச் சொல்லலாம்.

ஆண் பெண் ஆகிய இருபாலர்களுக்கும் சமஉரிமை [Rights] அளிப்பதற்காக அவர்கள்பாடுபட்டதுபோல் மனிதசமூக விவகாரங்களில் வேறு எவ்விஷயத்திலும் அவ்வளவு கவனம் செலுத்தவில்லை. ஆண் பெண் சுதந்திரங்களைக் குறித்து மாதர்கள் தாங்களும் ஆண்களைப் போல அவமதித்துப் பேசுவார்களேயானால் அவ்வாறு பேசுவதற்கு அவர்களுக்கும் உரிமை உண்டு என்று கூறுகிறார்கள்.

ஒரு வகுப்பார் மட்டும் இதுவரை சகல சுதந்தரத்தையும் இன்பத்தையும் தாங்களே அனுபவித்து வந்த வழக்கம் இன்று ஒழிக்கப்பட்டு, ஆண் பெண் இருவகுப்பார்களும் சமமாக பூரண இன்பத்தை அனுபவிக்கத்தக்கதான வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இருபாலர்களுக்குள்ளும் எவரும் ஒருவர் சுதந்திரத்தை மற்றொருவர் பாதிக்கத்தக்கவராக இருக்கக்கூடாதென்றும், அவ்வாறு எவரேனும் செய்வதாயிருந்தால் அந்தக்காரியம் தலையான பாவங்களில் ஒன்றாக மதிக்கப்பட்டும் வருகிறது.

## கற்பு.

எப்பொழுது பெண்களும் ஆண்களைப்போல சமஉரிமையோடு வாழ்ந்து வருகிறார்களோ அப்பொழுது 'கற்பு' என்ற கற்பனைச் சொல்லாகிய பழைய வழக்கப் பழக்கங்களும் மறைந்து ஒழிந்து, அவ்வார்த்தையானது யாதொரு அர்த்த புஷ்டியோ அல்லது வல்லமையுடையதோ என்று சொல்வதற்கில்லாமல் இருந்து வருகிறது.

இன்று சோவியத் ருஷியாவிலே 'கற்பு' என்று சொல்வதாலே பெருமையோ, புகழ்ச்சியோ இருப்பதாக யாரும் நினைப்பதில்லை. அல்லது 'அக்கற்பு' இழந்து விட்டது

என்று சொல்வதாலே யாரும் விசனப்படுவதோ கௌரவம் குறைந்ததாக நினைப்பதோ இல்லை.

ஆனால் சிலர் மட்டும் வருந்துவது உண்டு. ஏனெனில் அவர்கள் எல்லாம் பழையவழக்கங்களில் ஊறி உறைந்தவர்கள். ஆதலினால் அதிருப்தியாய் இருக்கிறார்கள். பெண்கள் கௌரவம் அல்லது கீர்த்திக்குத்தவிர மற்ற எந்த காரியத்திற்காகவும் வருந்தும் படியாகக்கட்டாயப் படுத்தப்படுவதில்லை.

ஆகவே, இன்று ருஷியாவிலே, சமூகத்தில் நடக்கும் சகலலாபநஷ்டங்களையும் உணர்ந்து ஒவ்வொருவனும் சமூகத்திற்காக வாழ்கிறோம், நமக்கும் அதில் பங்கு உண்டு என்பதை அறிந்து அதற்கு ஏற்ற வாழ்க்கையை நடத்த முடிவு செய்ய ஒவ்வொருவனுக்கும் பூரண சுதந்திரமும் பொருப்பும் அளிக்கப்பட்டிருக்கிறது.

## குழந்தைகள்.

விவாகத்திற்குப் பூரண சுதந்திரமும் சுயேச்சையும கொடுத்துவிட்டதால், அவர்களுடைய நாட்டில் பிறக்கும் சிசுக்களின் கதி அநாதியாய்விடும் என்று ஒருவரும் பயப்பட வேண்டியதில்லை.

ருஷ்ய சர்க்கார் சிசுக்களைக் குறித்து மிக ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். இவ்விஷயத்தில் மட்டும் அந்த சர்க்கார் மிகக்கருணை காட்டி அதற்கான பாதுகாப்புகளை செய்துவருகிறார்கள்.

பிள்ளைகளுடைய ஜீவனாம்சத்தைத் தவிர சோவியத் ருஷ்யாவிலே இன்று மணங்கள் என்பன யாதொரு நிர்பந்தமும் இல்லாமல் நடைபெற்று வருகின்றன.

எல்லாக் குழந்தைகளும்-அதாவது கலியாணம் செய்த தம்பதிகளுக்குப்பிறந்தாலும்சரியே, அல்லதுவேறுஎந்தவிதத்திலும் பிறந்தாலும் சரியே, சட்டப்பூர்வமாக அக்குழந்தைகளின் சவரக்ஷணைக்குப் பெற்றோர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை கவனிக்க வேண்டும்.

இன்று சோவியத்தில் சிசுக்களின் சம்ரக்ஷணைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்டம் தற்காலிகமானதென்பதை

ஒருவரும் மறந்துவிடக்கூடாது. ருஷிய தேசமானது இன்னும் சில துறைகளிலே முன்னேற்றமடைந்தவுடன் சிசுக்களுடைய சம்ரக்ஷணைக்கென தனியான விடுதிகள் ஏற்படுத்துவார்கள். அச்சமயத்தில் பெற்றோர்கள் விரும்பினால் தங்கள் குழந்தைகளை அத்தகைய விடுதிகளில்விட்டுச்செல்லலாம். பாதுகாப்பு சம்பந்தமான பொறுப்புகூட ஒவ்வொருவரிடமும் இருந்து நீக்கப்பட்டுவிடும்.

இப்பொழுது கூட ஒருவன் தனக்குப் பிள்ளை வேண்டாமென்றால் அதற்கு ஏற்ப வாழலாம். ஏனென்றால் கர்ப்ப ஆட்சியும், கர்ப்பச் சிதைவு செய்வதும் சட்டப்படி நியாயமானதெனவே கருதப்படுகிறது.

சாதாரணமாக ஒருவன் இன்று ருஷிய தேசத்திற்குள் நுழைந்துபார்த்தால் மக்கள் சுயேட்சையாக ஒருவரோடொருவர் நேசித்து வாழ்தலையும், சமூகத்தையே தனது இலக்காகக்கொண்டு வாழ்ந்து வருதலையும் பார்ப்பான்.

---

சுயேச்சையாக மண வாழ்க்கையை நடத்துவதால் மக்கள் எவ்வளவு சந்தோஷமாக வாழ்ந்துவருகிறார்கள் என்பதும் நன்கு விளங்கும்.

## விவாகச் சடங்கு.

ரிஜிஸ்டர் ஆபீசுக்குச் சென்று ரிஜிஸ்டர் புஸ்தகத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்வதான சடங்குகள் கூட இல்லாமலே மணமக்கள் தாங்கள் வாழ்க்கையை நடத்த ஆரம்பித்துவிடுகிறார்கள். இதனால் சர்க்காரும் சங்கடப்படுவதில்லை. மற்ற நண்பர்களும் கவலைப்படுவதுமில்லை.

என்றையத்தினம் சோவியத் சர்க்கார் விவாகத்தை ஒரு பெரிய விஷயமாக கருதவில்லையோ அன்றுமுதல் அந்நாட்டில் இச்சம்பவமானது ஒரு அற்ப விஷயமாகவும், ஒருவரும் கவலைப்படாத விஷயமாகவும் இருந்து வருகிறது.

விவாகமானது பரிசுத்தத்தன்மையான ஒரு காரியம் என்பது இந்நாளில் எவரும் அங்கு கருதவில்லை.

## விவாக விடுதலை.

எப்படிவிவாகமானது யாதொரு நிர்ப்பந்தத்திற்கும் சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டு நடைபெறுவதில்லையோ அவ்வா

றே விவாக விடுதலையும் யாதொரு கஷ்டமும் இல்லாமலே நடைபெற்று வருகிறது.

ரிஜிஸ்டர் ஆபீஸில் பதிவு செய்பவர்களில் கணவனோ அல்லது மனைவியோ இருவரில் ஒருவர் விவாக ரத்தை விரும்பினால் நேராக ரிஜிஸ்டர் ஆபீசுக்குச் சென்று புஸ்தகத்தில் தனது விவாக ரத்தைப் பற்றி எழுதிவிட்டுப் பிரிந்துகொள்ளலாம். இவ்வாறு நடைபெற்றுவந்ததால் ருஷியாவின் தலைநகரத்திலே சில புகார்கள் தோன்றலாயின. ஏனெனில் காமிஷ்டிகளும் அசுத்தக்காரர்களும், இவ்வழக்கத்தை துர்ப்பிரயோகப்படுத்தினார்கள்.

## புதிய சட்டம்

இதன் காரணமாக சோவியத் சர்க்கார், விவாக—அதாவது ஒருவருடைய ஆண் பெண் தன்மையைப்பொறுத்த சுதந்திரத்தைச் சிறிது பாதிக்கவேண்டியிருந்தது.

விவாகங்களில் பகுதிக்குப் பகுதிப்பாகமாக விவாக ரத்தாக நடைபெற்றுவந்ததாலும், மூன்று வருடங்களுக்குள் லட்சக்கணக்கான சீவனாம்ச வழக்குகளை தீர்க்கவேண்டி நேரிட்டதாலும் சோவியத் சர்க்கார் ஒரு புதிய சட்டத்தை உருவாக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

எப்படி என்றால் ஒருவன் குடும்ப வாழ்க்கையை அற்பமாகக் கருதுவானேயாகில், தண்டிக்கப்படுவான் என சர்க்கார் தெரிவிக்கிறார்கள்.

அதாவது போஸ்டு கார்டில் விவாக ரத்து செய்துகொள்ளும் வழக்கத்தை ஒழிக்க சட்டமியற்றியுள்ளார்கள்.

இதனால் சோவியத் சர்க்கார் விவாக ரத்து உரிமையையே ஒழித்துவிட்டதென்று ஒருவரும் எண்ணிவிடவேண்டாம்.

இதுவரை செய்து வந்தபடி அதாவது விவாக ரத்தை விரும்புகிறவர் அதற்கென ஏற்பட்டுள்ள சங்கத்திற்கு சென்று 3-ரூபிள் கொடுத்துவிட்டால் சங்கத்தார் அந்த விவாக ரத்தை பதிவு செய்துகொண்டு அடுத்த நபருக்கு இதன் விபரத்தை ஒரு போஸ்டு கார்டு மூலமாகத் தெரிவித்துவிடுவார்கள்.

விவாக ரத்துக்கள் அதிகமாக நடைபெற்று வந்ததாலும், ...த்தைக்குறித்து விசாரிக்க ஏற்படுத்தப்பட்ட கமிட்டியார்

செய்த பேர்களுக்கு இணங்க அந்த வழக்கத்தை ஒழித்து சர்க்கார் விவாக ரத்தின் காரணத்தை விசாரித்து இரு கட்சியாருக்கும் அறிவுறுத்தி அதன்பின்தான் விவாக ரத்தை அளிக்கிறார்கள்.

பழய வழக்கங்களிலே நம்பிக்கையும் அபிமானமும் இருக்கிற ஒருவன் ருஷியநாட்டு மக்களைப் பார்த்தால் மிருகத்தைப் போல் வாழ்க்கையைதான் அவர்களும் நடத்தப்போகிறார்கள் என ஒரு வேளை சந்தேகங் கொள்ளக்கூடும். அவ்வாறு எவனும் அஞ்சவேண்டியதில்லை. ஏனெனில் ருஷிய மக்கள் எவரும் எத்தகைய நிர்ப்பந்தத்திற்கும் உட்பட்டவர்களும் அல்ல. அல்லது வேறு எங்கிருந்தும் குடியேறிய மக்களும் அல்ல.

விவசார விடுதிகளை ஒழித்து விட்டார்கள். வியாபார முறையிலே ஆண் பெண் தன்மையை ஏய்க்கும் விஷயங்கள் யாவும் தடுக்கப்பட்டு விட்டன. அதை விவரிக்கும் பத்திரிகைகளும் படக்காட்சிகளும் கிடையா.

ஒவ்வொருவரும் சுகாதாரத்தையும், சமூக பொருப்பு முதலியவைகளையும் அறிந்து கொள்ளத்தக்கதான முறைகளே இன்று அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

உலகத்தில் உள்ள சகல தேசங்களும் ருஷிய தேசத்தைப் போல ஆண் பெண் தன்மையைக் குறித்த பிரச்சனையை பரீக்ஷை செய்து பார்க்கவேண்டுவது அவசியமாகும்.

ஆனால் 20 வருடம் போதுமான காலமாகாது. அவ்வாறு இருந்தும் ருஷியர்கள் தங்களுடைய பின் சந்ததியார்களை சமூகத்திற்கு ஏற்றவர்களாகவும் காம வெறியற்றவர்களாகவும் சிருஷ்டிப்பதில் மிக ஊக்கத்தோடு காரியங்களை செய்து வருகிறார்கள்.

கட்டாயத்தினால் ஒருவன் ஒழுக்கமுடையவனாயிருத்தலைவிட சுயேச்சையாக அதாவது இயற்கையாகவே ஒழுக்கமுடையவன் தானே சிறந்தவன். அத்தகைய மக்களைத்தான் சோவியத் சர்க்காரார் சிருஷ்டிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள்.

உலகத்திலே இம்முறை ஒரு பெரிய புரட்சியை உண்டு பண்ணுகிறது. அதிலும் சிறப்பாக ஆண் பெண் தன்மையே ஒரு பெரிய மாறுதலை அல்லது புரட்சியை உண்டுபண்ணி வருகிறது என்பதில் ஐயமில்லை.

# சென்னை உலகம்.

(லாலா லஜபதிராய் எழுதியது.)

---

தோழர் பட்டாபிராமய்யர் மொழிபெயர்ப்பின்

சாராம்சம்.

இதை அவசியம் ஊன்றி வாசிக்கும்படி நேயர்களைக்கேட்கிறோம்!

பஞ்சாப் தேசபக்தரும், சென்னை வாசிகளால் பெரிதும் "பாஞ்சால சிங்க"மென்றும், "பாஞ்சால தெய்வ"மென்றும் கொண்டாடப்படும்படியான பெரியாருமாகிய லாலா லஜபதிராய் அவர்கள் காலமாகுமுன் சென்னை மாகாணத்தை வந்து பார்த்துவிட்டுப் போனபிறகு நமது 'தமிழ் நாட்டைப் பற்றித் "தியாக பூமி" யென்னும் பத்திரிகையில் வெளியிட்டுள்ள அபிப்பிராயம்:—

"நான் இதற்குமுன் இரண்டொரு தடவை சென்னைக்குச் சென்றிருக்கின்றேன். ஆனாலும் சென்னையின் உண்மை நிலையை விசாரித்து அறிவதற்குப் போதிய சந்தர்ப்பம் அப்போது கிடைக்கவில்லை. இப்பொழுது நான் அறிந்தவற்றைத் தெரிவிக்கின்றேன்.

வட இந்தியாவில் இந்து முஸ்லீம் கலவரங்களால் எப்படி மக்கள் பிரிவுபட்டுத் தொந்தரவுபட்டு வருகின்றார்களோ அதுபோலவே சென்னையில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதாரென்னும் சச்சரவால் பெரிதும் கலவரமேற்பட்டுத் தொந்தரவேற்பட்டிருக்கிறது. எந்த இடம நமது பண்டைக்காலத்து நாகரீகத்தின அறிகுறியும், இந்து மதத்தின் உண்மைத் தத்துவங்களும் ஒரு சிறிதுங்கூட காணப்படாமல் மறைபட்டுக்கிடக்குமோ அந்த இடத்திற்கு நிதர்சனமாகச் சென்னையைச் சொல்லலாகும்.

புராண காலத்தின் பெரியோர்களாகிய சங்கரர், மத்துவர், ராமானுஜர் ஆகிய மூவரும் சென்னையில் பிறந்தவர்கள். இச்சென்னை மாகாணம் அப்பெரியோர்களால் கற்பிக்கப்பட்ட இந்து நாகரீகத்தைப் பின்பற்றுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், நான் இச்சென்னையைப் பார்த்தவரையில் இந்து

மதத்தின் பேரால் எந்தெந்த நடவடிக்கைகள் பழக்க வழக்கத்திலும் அமுலிலும் இருந்துவருகிறதாக அறிகிறேனோ அவைகள் ஒருக்காலமும் நம்மை சுயராச்சியத்திற்குச் செலுத்திக் கொண்டு போகமுடியாதென்று நிச்சயமாய்ச் சொல்லுவேன்.

சென்னையில் வேதாந்தமும் இந்து தத்துவ சாஸ்திரமும் வெகு உயர்ந்த நிலையிலிருக்கின்றன. ஆனால் அவற்றின் பிரயோகமும் பிரத்தியட்ச வாழ்வும் மிக மிக இழிவான நிலைமைக்குப் போய்விட்டன.

## ஆலயங்களில் ஆபாசம்.

சென்னையிலிருக்கும் கோவில்களின் கட்டட நிர்மாணங்களெல்லாம் ஆகமத்தின்படி மேலானவைகளாயிருந்தபோதிலும் நடவடிக்கையில் முழுதும் ஆபாசங்கள் நிறைந்த அடைப்புகளாகவே இருக்கின்றன. அவைகளின் காலாபக்கங்களிலும் அசாச்சாரமும், அனாகரீகமுமான வாழ்வேகாணப்படுகின்றன. சென்னை வாசிகளின் ஆங்கிலப்படிப்பானது அவர்களுடைய மேற்கண்ட கோட்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் கொஞ்சமும் திருத்தமுடியவேயில்லை. அன்றியும் இவர்களுடைய வகுப்புச் சண்டையும், ஒருவரையொருவர் அடைந்து வெறுப்பதையும் பார்த்து மிகவும் துக்கமுண்டாயிற்று.

சென்னை இந்துக்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன:—பிராமணர்கள், பிராமணரல்லாதார்கள், தீண்டாதார்கள். சமீபகாலம் வரையில் இந்தராஜதானியின் இராச்சியாதி காரங்கள் முழுவதையும் பிராமணர்கள் கைப்பற்றி இருந்து வந்ததாகத் தெரிகின்றது. அந்நிலைமையிலேற்பட்ட அதிருப்தியின் காரணமாகப்பிராமணரல்லாதாரில் ஒரு கட்சியார் ''பிராமணரல்லாதார்'' இயக்கத்தை ஆரம்பித்தார்கள். பிராமணர்களும், பிராமணரல்லாதார்களும் ஒருவரையொருவர் எதிர்ப்பதற்காகவே இரு கட்சிகளாகப் பிரிந்துகொண்டார்கள் என்று சொல்லலாம். ஆனாலும், இரு வகுப்பாரும் ஒருவரையொருவர் பொதுவாகவே எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். சென்ற சிலகாலம் வரை காங்கிரசில் பிராமணராதிக்கம் இருந்தது. சமீபத்தில் நடந்த சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ்காரர்கள் அனேக பிராமணரல்லாதார்களைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டார்கள். இதனால் சென்னை சட்டசபையில் காங்கிரஸ் பிராமணக் கட்சிக்கு மிகுந்த பலம் ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் சென்ற மாதத்தில் ஒவ்வொருவராக அந்தக் கட்சி

யை விட்டு நழுவி எதிர் கட்சியிலே சேர்ந்துகொண்டார்கள். அதனால் காங்கிரஸ் சட்சிக்கு மிகவும் கெடுதல் ஏற்பட்டிருக்கிறது.

சென்னையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு அதனுடைய கொள்கைகள் என்னவென்று நிர்ணயம் செய்வதே எனக்கு மிகவும் கஷ்டமாக விருக்கின்றது. சென்றவருஷம் சென்னையில் கூடிய காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக இரண்டு தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. அவைகளுக்கு, ஒருவரை விட ஒருவர்மேலென்று சொல்லும்படியாக வானத்தையளாவும பெரிய பெரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். ஆனால் எந்தக் காங்கிரஸ் கட்சியும தாசமயம் அவைகளை அனுஷ்டானத்திற்குக்கொண்டுவரவில்லை சென்னைக் காங்கிரஸ் கட்சியின் சக்தி இப்போது சின்னாபின்னப்பட்டுப்போகிறதென்பதில் ஆட்சேபனையில்லை.

சீனிவாசய்யங்கார் கவலை.

காங்கிரஸ் சட்சியின் தலைவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருடன் ஒருநாள் பேசிக்கொண்டிருந்தேன். அச்சமயம் வேறு சிலரும் பக்கத்திலிருந்தார்கள். அந்தச் சமயம் காங்கிரசின் யோக்கியதையைச் சொல்லி எவ்வளவு தூரம் துக்கப்பட்டாரென்பதை இதில் எழுதுவது உசிதமாகத் தோன்றவில்லை. ஆனாலும், அவரே சமீபத்தில் ஒரு பிரசங்கத்தில் சென்னைக்காங்கிரஸ் கட்சியின அபிப்பிராயத்திலாவது செய்கையிலாவது ஒற்றுமை இல்லையென்றே வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். காங்கிரஸ்கட்சியில் யார்யார் எவ்வெவ்விதமான அபிப்பிராயங்களை கொண்டிருக்கிறார்களோ, அவரவர்கள் அவ்வவ்வபிப்பிராயங்களைக் கொண்டு தங்களிஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தனித்தனி கட்சி சேர்க்க வேண்டியிருக்கின்றது. மேலும வெவ்வேறு அபிப்பிராய முள்ளவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு கட்சி சேர்த்துக் கொண்டு தங்கள் தங்கள் அபிப்பிராயப்படி வேலை செய்யவேண்டும். அப்படியானால்தான் காரியம் நடைபெறுமென்று சொன்னார். ஆனால் என்ன காரியம எனபதைப் பற்றி மாத்திரம் சொல்லவில்லை.

பொதுவாகத் தன்னெதிரில் மூன்று விஷயங்கள் இருக்கின்றன வென்று மட்டும் அவர் சொன்னார். அவற்றில் ஒன்று இந்தியாவின் பூரூச்சுதந்திரம் என்றும், இரண்டாவது பொதுஜனங்களைத் தங்கள் கட்சியில் சேர்ப்பது என்

றும், மூன்றாவது அவைகளுக்காகப் பணம் சேர்ப்பது என்றும் சொன்னார். கொஞ்சகாலமாக முழுச் சுதந்திரம் என்கின்ற பேய் சில இந்தியரைப்பிடித்திருக்கிறது முழுச்சுதந்திரத்தையடைய ஒருவரும் இஷ்டமில்லையென்று சொல்லமாட்டார்கள். ஆனால் முழுச்சுதந்திரமோ அரைச்சுதந்திரமோ என்பவைகள் வெறும் வாய்ப்பேச்சுகளால் கிடைக்கக் கூடியவையல்ல. ஆனால் முழு அரசியல் வேலைகளின் அஸ்திவாரமே வெறும் வாயளப்பின் ஆதாரத்தின் மேலேயே நிற்கின்றது. வாலிபர்கள் மகாநாடுகளில் வேலும் மேலும் வார்த்தைகளைப் பேசுகிறார்கள். வயது முதிர்ந்த தலைவர்களின் மேல் அதிருப்தியைத் தெரிவிக்கிறார்கள். அரசாங்கத்திற்கு விரோதமாக வெகு ஆவேசமாய்ப் பேசுகிறார்கள். ஆனால் அவைகளை பதட்டத்தின்பைத்தியக்காரத்தனம் என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் இம்மாதிரி ஆவேசமான வார்த்தைகளினால் இதுவரையில் எவ்விதமான பலனும் ஏற்பட்டதில்லை.

சாதாரணமாக மகாத்மா காந்தியின் சொற்படி மூன்று வேலைகளிருக்கின்றன. அவை அன்னிய துணி விலக்கு, தீண்டாமை ஒழித்தல், இந்து முஸ்லீம் ஒற்றுமை. இவற்றுள், சென்னையில் இந்து முஸ்லீம் வேற்றுமை அவ்வளவு கொடூரமான நிலையில் இல்லை. ஆனால் சென்னைத் தலைவர்கள் இதை ஒழுங்கு படுத்தப் பிரவேசித்ததின் பலனாய் வேற்றுமையை அதிகப்படுத்தி விட்டார்கள்.

அடுத்தபடியாகக் கத்தர் பிரசார வேலையை எடுத்துக் கொள்வோம். அது இப்போது காங்கிரஸின் நேர்பார்வையிலில்லை. அதை மகாத்மா அவர்கள் அகிலபாரத சர்க்கா சங்கத்தின் மூலமாக நடத்தி வருகிறார். தேச முழுவதிலும் இருநூற்றைம்பது கத்தர் பண்டகசாலை திறந்து வைத்திருக்கிறது.

## தீண்டாமையொழிப்பு மோசடி.

மூன்றாவது விஷயம் தாழ்த்தப்பட்டவர்களுடையது. சென்னை காங்கிரஸ் தலைவர்கள் இவ்விஷயத்தின் பக்கம் மறந்து கூடத்தலைவைத்துத் தூங்கவில்லையென்று தோன்றுகிறது. சென்னை காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளாகவே இன்னமும் குருட்டு நம்பிக்கை இருந்து வருகிறது மல்லாமல் இந்து புராணங்களில் கற்பிக்கப்பட்ட எல்லாவேற்றுமைப்பாடுகளும் அவர்கள் உள்ளத்தில் இன்னமும் நிறைந்திருக்கின்

றன. ஆதலால் அவர்கள் தங்கள் சமூக வாழ்க்கையைச் சீர்திருத்தும் பொருட்டாக ஒரு வேலையும் செய்வதே இல்லை. அன்றியும் தீண்டாமையை ஒழிப்பதன் பொருட்டு இந்த மாகாணத்தில் ஏதாவது வேலை நடந்திருந்தால் அது அவ்வளவும் வெளிமாகாணங்களிலிருந்து வரப்பட்ட பொருளுதவியால் நடந்து வருகிறது.

எல்லாவற்றிலும் இழிவான நிலை மலையாளத்தில் தீண்டாதார்களுடையது. நான் மலையாளத்தில் தீண்டாதார்களின் நிலையை அறிவதற்குச் சில நாட்கள் செல விட்டேன். அவர்களின் நிலைமையையும், தீண்டாமையை ஒழிக்கவேண்டிய அவசியத்தையும் அவ்வேலையிலிருக்கும் கஷ்டத்தையும் நோக்கி மிக மிகத் துக்கித்தேன். அங்கு நான் எதைப் பார்த்தேனோ, எதைக்கேட்டேனோ அவைகளைப்பற்றி மற்றொரு வியாசத்தில் எழுதுகிறேன். ஆனால் இதை இங்கு சொல்லாமலிருக்க முடியாது. அதாவது எந்த ஜனங்கள் சமூக சீர்திருத்த மில்லாமல், அரசியல் சுதந்திர இயக்கம் நடத்துகின்றார்களோ அவர்கள் தேசத்தின் உண்மை நிலையை அறியவில்லையென்பதுதான். எதுவரைக்கும் அவர்கள் உண்மையாகக் கபடமற்று ஹிந்து கூட்டத்தின் (சமாஜத்தின்) ஆசாரப் புரட்டுகளை மாற்றுவதற்கு முயற்சி செய்யவில்லையோ அதுவரைக்கும் விடுதலை அடைவது என்பது ஒருக்காலும் முடியாத காரியம் என்பேன். நான் எப்பொழுதும் இந்த அபிப்பிராயமுடையவனாயிருந்த போதிலும் சென்னையின் நிலைமையைப் பார்த்தபிறகு இந்த எண்ணம் முற்றிலும் உறுதிப்பட்டுவிட்டது. அன்றியும் சென்னையில் இதுவரையில் ஆசாரச் சீர்திருத்த விஷயமாக ஒரு காரியமும் செய்யப்படவில்லை என்றே சொல்லுவேன். அங்கே சில கனவான்கள் பிரார்த்தனை சமாஜத்தினுடையவும் பிரம்ம ஞான சபை (தியோசாபிகல் சொஸைட்டி)யினுடையவும் நோக்கங்களைக் கொண்டு ஆசாரச் சீர்திருத்தத்திலீடுபட்டிருக்கிறார்கள். ஆனால் படிப்புள்ள ஜனங்கள் கூட ஆசாரச் சீர்திருத்தத்தை மத விரோதமென்றும், அனாவசியமென்றும் கருதுகிறார்கள்.

## ஸ்ரீரங்கம் துராசாரம்.

இத்தடவையிலும் சென்னை மாகாணத்தில் ஸ்ரீ ரங்கத்திலுள்ள பெரிய வைணவ கோவிலைப்பார்த்தேன். இக்கோவிலில் ஸ்ரீ ரங்கநாதரின் பூஜை நடக்கிறது. இராமநுஜ ஆசாரியின் விசிஷ்டாத்வைத முறைப்படி இங்கே தெய்வவழிபாடு நடக்

கிற தென்று சொல்லுகிறார்கள். ஆனால் (என்னை மன்னிக்கவேண்டும்) நான் அந்த கோவிலைச் சுற்றியுள்ள எல்லா விஷயங்களையும் கண்ணுற்று மிகவும் வெறுப்படைந்தேன். வெகு நேரம்வரை ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கிவிட்டேன். எனக்கு அந்தக் கோவிலில் மனிதத்தன்மைக்கு ஏற்ற ஒரு விஷயமும் புலப்படவில்லை. அவ்விடத்தில் நடக்கும் துரா சாரங்கள் மனிதன் சகிக்கக்கூடியதல்ல. பொட்டுகளையும் பட்டை நாமங்களையும் தீட்டிய நெற்றியுடைய பெரிய பெரிய ஆங்கிலங்கற்ற பண்டிதர்களுடைய சம்பாஷணையைக் கேட்டதிலிருந்து வெறும் புத்தகத்தங்களை வாசித்தலால் மட்டும் மனிதனுக்கு அறிவு ஏற்பட்டு விடாது என்று நிர்ணயம் செய்துகொண்டேன். நான் ஏதோ ஒரு மதத்தைப் பிரசாரம் செய்கிறவனல்ல. நான் எல்லா மதங்களினாலும் துக்கமடைந்து மதக் கட்டுப்பாடுகளிலிருந்து விலகிக்கொண்டவன். ஆனால் எது மனிதனுக்கு நன்மை பயக்குமென்றும் எது நன்மை பயக்காதென்றும் தெரிவதற்குப்போதிய அறிவும் சக்தியும் என்னிடமிருக்கிறது. சென்னை மாகாணத்தில் உள்ள கோவில்களினுடைய பூஜை முதலிய நடைமுறை நம்மை சமூக வீழ்ச்சி நரகத்திற்கே கூட்டிச் செல்லுகிற தென்பது எனக்கு நன்றாய்ப் புலப்பட்டுவிட்டது. எங்கெந்தக்கோவில்களில் தெய்வவழிபாட்டின் பெயரால் துராசாரம் (விபசாரம்) நடக்கிறதோ, எங்கே இதுவரையிலும் ஜனங்கள் விபசாரத் தொழிலைக் கோவில்களின் வழிபாட்டின் ஒரு முக்கியமாக கருதுகின்றனரே, எந்தச் சன சமூகத்தில் நாளிதுவரை யாராவதொருவருடைய கடவுள் பக்தியை தெரிவிப்பதற்கு நெற்றியில் நாமம் முதலிய குறிகள் நீண்டோ அகண்டோ வட்டவடிவமாகவோ இருக்க வேண்டியது அவசியமென்றும் கருதப்படுகின்றதோ அந்த ஜன சமூகத்தில் அரசியல் சுதந்திரத்தைப் பரவச்செய்வது ஒருக்காலமும் முடியாத காரியம். மத சம்பந்தமாகவோ இராஜீய சம்மந்தமாகவோ சமூகச்சம்மந்தமாகவோ மற்றும் வேறு எது சம்மந்தமாகவானாலும் சுதந்திரப்பிரசாரம் செய்ய முற்பட்டால் அதில் முதலாவதாக மனித சுதந்திரம் கொஞ்சமாவது வெளிப்படவேண்டும். எந்த மதத்தில் பகுத்தறிவோடு யோசனை செய்யும் மனோபாவத்திற்கு இடம் சற்றேனும் இல்லையோ அதில் இராஜீய சுதந்திர நோக்கத்தைப் புகுத்தல் அசாத்திய மில்லாவிட்டாலும் நிச்சயமாகச் சுலபத்தில் சாத்தியமாகக் கூடிய காரியம் அல்ல என்றே சொல்லுவேன்.

## சென்னைக்காரர் ஜாலவித்தை.

நமது சென்னை சகோதரர்கள் பெரிய ஜாலவித்தைக்காரர்கள். வாய்க்கணக்கில் பெயர் படைத்வர்கள். வேதாந்தம் பேசுவதிலோ இணையற்றவர்கள். எழுதுவதிலும், பேசுவதிலும் மகா மேதாவிகள். ஆனால் செய்கையிலும் மத விஷயத்திலும் அவர்களுடைய நடவடிக்கை கீழ்க்கண்ட இரண்டில் ஒன்றாகத்தானிருக்கவேண்டும். அதாவது அவர்களுடைய புத்தி அத்துறையில் செல்லவேவிடாதவர்கள். அல்லது மிகவும் கோடிய வஞ்சகர் களாக இருக்கவேண்டும்.

அடிமைத்தனம் வஞ்சகத்தின் தாயகமாகும். எங்கே மதத்தின் கொள்கைகளின்படி வெளிவேஷத்தையே முக்கியமாகக் கொள்ளப்படுகிறதோ அங்கே முதலில் புத்தியின் அடிமைத்தனமும், பிறகு சரீரத்தினடிமைத்தனமும் உண்டாகி ஒரே வாழ்வில் மேற்படி இரண்டு ரூபங்களும் ஏற்படுகின்றன. சென்னையின் மதத்தின் நிலைமையையும் சமூகத்தின் நிலைமையையும் பார்த்து சென்னைக்கு ஒருதயானந்தரிஷியின் அவசியமிருக்கிறதென்று எனக்கு எண்ணமுண்டாயிற்று. சென்னையைப்போலொத்த குருட்டு நம்பிக்கை கொண்ட இந்து மாகாணத்தை சீர்திருத்தத்திற்கு கொண்டுவருவதென்பது ஆரிய சமாஜிகளால் கூட முடியாது என்பதாகத் தோன்றுகின்றது. நாளிதுவரை ஏற்பட்ட சீர்திருத்தஸ்தாபனமாகிய பெரிய கப்பல்களெல்லாம் சென்னை என்கின்ற பாறையில் மோதி உடைபட்டு மூழ்கிவிட்டதாகவே தெரியவருகிறது. ஆரிய சமாஜத்தாலும் மதராஸில் சந்தோஷகரமான வேலை எதுவும் செய்ய முடியவில்லை. சென்னையில் கரைகண்ட பயமற்ற சீர்திருத்தக்காரர்களின் தேவை இருக்கிறது.

இதுவரையிலும் சென்னையில் ஆரிய சமாஜத்தைப் பரப்புவதற்கு எவ்வளவு முயற்சி செய்யப்பட்டதோ அவ்வளவுக்குப்போதிய பலன் கிடைக்கவில்லை. அவ்விடத்திய சமய சமூக நிலைமை விஷக்காற்று சூழ்ந்ததாயிருக்கின்றது. மிகக் குறுகிய நோக்கமுடையதாயிருக்கிறது. இந் நிலைமையில் இம்மாகாணத்தில் கொஞ்சமாவது காரிய சித்தியடைவதற்குத்தக்க யோக்கியதையுடைய ஒரு தீரன் வேண்டும். சென்னை மாகாணத்தாருள்ளேயே அப்படி ஒருவர் உண்டாவார் என்ற நம்பிக்கை எனக்கில்லை மற்ற மாகாணங்களைக் காட்டிலும் இம்மாகாணத்திலுள்ள பெண்களுங்கூடப் படித்தவர்களாகவே இருக்கிறார்கள். இதுதான் நம்பிக்கையைக் கொடுக்கக்கூடிய வழி. பெண்களின் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்

# ஆப்போதே வாக்குக்கொடுத்திட்டேன்.

[ சித்திரபுத்திரன். ]

தாய்:—ஏண்டி சேஷு குட்டி அவன் சாயபு ஆச்சுதேடி அவன்கிட்டே என்னடி ரகசியம் பேசுறே.

மகள்:—இல்லே அம்மா நான் சின்னக்குழந்தையா இருக்கச்சே வீதியிலே விளையாண்டிருந்தப்போ மணலிலே ஒரு வீடு கட்டினேன். அதை வந்து இந்த அடுத்த ஆத்து சுக்கூர் இடிக்கவந்தான். நான் இடிக்காதடா என்று சொன்னேன், அப்படியானால் என்னைக் கட்டிக்கிறாயா என்று கேட்டான், நானு வீடு இடிந்துபோமேன்னு ஆகட்டுமென்று சொல்லிட்டேன். அதை இத்தனை நாள் மனசிலே வெச்சிண்டிருந்து இப்ப வந்து கேக்கராண்டி.

தாய்:—நீ என்னடி சொன்னாய்,

மகள்:—நான் என்னம்மா சொல்லட்டும், ஆகட்டுமென்னு தான் சொல்லித்தொலைச்சேன்.

தாய்:—அடி அடி நாசமாப்போன முண்டே! துலுக்கனையா கட்டிக்கிரேண்ணு சொன்னே, நீ பேதியிலே போக, நீ பிளேக்கிலே போக, உனக்கு ஒருஉளமாந்தைவர.

மகள்:—கோவிச்சுக்காதே அம்மா! அப்ப நான் ஆகட்டும் என்னு சொல்லியிருந்தேன் அல்லவா, அதை வச்சிண்டு வந்து கேட்டான். பின்னே நான் என்ன சொல்றது.

அப்ப நான் அப்படி சொல்லாதே இருந்தா வீட்டை இடிச்சிருப்பானம்மா?

---

கள் காரியம் செய்து காண்பிப்பார்களென்று நம்புகிறேன் ஏனெனில் சென்னை மாகாண ஆண்பிள்ளைகளின் யோக்கியதையில் எனக்கு சிறிதும் நம்பிக்கையில்லை. அந்நாட்டு ஆண் மக்கள் வெறும் பேச்சுக்காரர்கள்; வாய்ச்சண்டை செய்பவர்கள்; காரியத்திற்கு உதவாதவர்கள்.

)0(

தாய்:—உன் தலையிலே நெருப்பைக் கொட்ட, நான் 2, 3—வருஷத்திற்கு முன்னையே உன்னைக் கல்யாணம் பண்ணனும் என்னு உங்கப்பாலுடே சொன்னபோது, உங்கப்பா சாரதாசட்டமோ லக்ஷ்மி சட்டமோஎன்னமோபேரெழவுசட்டம் குறுக்கிடறதடி என்று சொன்னார் அந்தப் பிராமணன். இப்போ நீ மண்ணுக்கொளிச்சிண்டு விளையாடறபோதே அவனுக்கு வாக்குக்கொடுத்துட்டேன் என்கின்றாயே, இன்னம் கொஞ்ச நாள் போனா பறையனுக்கும் சக்கிலிக்கும் பால்குடிக்கிறபோதே வாக்குக்கொடுத்துட்டேனென்றல்லவாடி சொல்லுவாய். என் வயிரு பத்தி எறியரதேடி, நீ அந்த சுக்கூரோடு கொஞ்சினதைப்பார்த்து.

மகள்:—இல்லே அம்மா உன்னெதிரிலே நான் கொஞ்சுவேனா அம்மா? 2, 3, வருஷத்திற்குமுன்னே கல்யாணம் ஆயிருந்தால் கூட அப்பவும் நான் வாக்குத்தவறமாட்டேனம்மா. இதுக்கு நீதான் ஒரு வழி சொல்லேன். இப்ப அவன் வந்து நீ சொன்ன வார்த்தை என்னடி சேஷுகுட்டி என்றானே, அப்பவும் இப்படித்தானே கேட்பான்.

தாய்:—அடிசண்டாளி சொன்ன வார்த்தையாவது மண்ணாங்கட்டியாவது அவன் இனிமே இங்கேவந்தா உன்மயிரை அறுத்துடுவேன் தெரியுமா?

சின்னக்குழந்தையாய் இருக்கும்போது என்னமோ சொன்னாளாம அவன் வந்துஇப்பொ கேக்கறானாம் என்னடி அனியாயம் இது?

மகள்:—நீ மயிரை அறுக்கவாண்டாம் அம்மா சுக்கூரே என் மயிரைக் கத்தரிச்சூடறேன் என்று சொல்லி இருக்கான். யாரோ சரோஜனி குட்டிகளாம் அதுகள் மயிரைக் கத்திரிச்சிண்டிருக்காம். அதுமாதிரி என்னையும் கத்தரிச்சி விட்றேன்னு சொன்னான்.

தாய்:—அய்யய்யோ கெட்டுப்போச்சடி காரியம். நம்ம குடும்பத்தையே ஜாதியையே பாழாக்கிட்டாயே நான் காவேரியில் போய் விழ்ந்துடறேண்டி உன்னாலே.

மகள்:—அம்மாம்மா, வேண்டாம்மா பின்னெ நா என்னாம்மா சொல்லட்டும் சுக்கூருக்கு?

தாய்:—என்னடி சொல்லறது. நான் அப்போ கொழந்தையா இருக்கச்சே வேடிக்கையாசொன்னா இப்ப என்ன மாடா

வந்து இத்தனை தைரியமாக் கேக்கறாய் என்று அதட்டிச் சொல்லடி.

மகள்:—இப்பவும் நான் கொழந்தை தாம்மா.

இப்ப யாரையாவது கட்டிண்டா கட்டின ஆம்படையா னை இன்னும் 10 நாள் பொறுத்து நான் கொழந்தையா இருக்கும்போது கல்யாணம் செய்தூண்டேன் நீவாண்டாம் போண்ணு சொன்னாபோய்டுவானா? அப்படி தாம்மா சுக்கூ ரும் கேட்பான். ஒருதடவை வாக்குத்தவறினால் என்ன? இரண்டுதடவை வாக்குத்தவறினால் என்ன? அப்புறம் தினம் தினம் வாக்குத்தவறினால் தான் என்னம்மா?

நான் சுக்கூர் கிட்ட சொல்லீட்டேன் கட்டினா அவனைக் கட்டிக்கிறேன். இல்லாவிட்டால் கன்னியா மடத்தில் சேர்ந் துக்கிறேன். எனக்குப் புருஷனே வாண்டாம், சுக்கூர் மூக த்தில் மறுபடியும் நான் எப்படி விழிப்பேன்.

தாய்:—உங்கப்பா வரட்டுமடி, நாளை காலையில் வரப் போரார். இதெல்லாம் அவரிடம் சொல்லி உன்னை இந்த வார த்துக்குள்ளாகவே எவன் தலையிலாவது கட்டித்தொலைத்து விட்றேன்.

மகள்:—அப்படியா என்னமோ செய்துக்கோ நான் என் னமோ சுக்கூருக்கு வார்த்தை கொடுத்திட்டேன்.

தாய்:—உம், உம் கொடுப்பேடி ஆள் ஸ்ளப்பாளியாய் இருந் தால் (என்று சொல்லி விட்டு பேச்சை முடித்து விட்டாள்.)

இரவு 1 மணிக்கு சுக்கூரும் சேஷுக்குட்டியும் டப்பிள், தகப்பனார்வந்தார்.

தாய்:-எம்பேசலே கேட்டீளா சேஷுகுட்டி அடுத்தாத்து சுக்கூருடன் ராத்திரி ஓடிட்டா.

மகள்:—அவனோடு தான் போனாள் என்று உனக்கு எப் படி டீ தெரியும்.

தாய்:—நேற்று அவனோடு சிரிச்சிண்டு பேசிகிண்டிருந்தா நான் கண்டிச்சேன் அவள் ஒரு தைரியம் சின்ன கொழந்தை யாய் மண்ணுக்கொளிச்சிண்டு விளையாடும்போது அவனைக் கட்டிக்கிறேண்ணு வாக்குக் கொடுத்துட்டாளாம். அதுக்காக அவனை கட்டிக்கணுமாம். அப்படின்னு என்னிடம் சொல்றா, வஸ்சேன் அப்பாவந்த சொல்ரேண்ணே பயந்துண்டு ஓடிட்டா முண்டை.

தகப்பன்:—சனியன் தொலைந்ததுபோ. அவன் மேலே அவளுக்கு ஆசை வந்துட்டுது என்னமோ சொல்லிண்டு ஓடிட்டா. நல்லகாரியம் இந்த நம்ம அயோக்கிய ஜாதியிலேயே அவளுக்கு தகுந்த மாப்பிள்ளை வேணுமுண்ணா 5000 ரூ வரதக்ஷணை-கல்யாணச் செலவு 2000 ரூ ஆக 7000-ரூபாயிக்கு எங்கே போரது யாரை விக்கிறது.

போகட்டும் போஅவனும் S. S. L. C. பாசுபண்ணி இருக்கான் நல்ல அசல் சாயபு பிராமணனாட்டமா செக்கச்செவேரெண்ணு இருக்கான். பிராமணன் M. A. படிக்கிறதும் சரி சாயபு S. S. L. C. படிக்கிறதும் சரி, சீக்கிரத்திலெ ஏதோ வேலைக்கு வந்துடுவன், நம்மை விட்டது சனியன.

தாய்:—ஐயய்யோ அசட்டு பிராமணா அப்படிதான் இருந்தாலும் ஒருமுதலி நாயக்கன் இல்லையா சாயப்போடவா ஓடரது.

தகப்பன்:—என்னமோ அவகண்ணுக்கு பிடிச்சவனோடு போயிட்டா நம்ம ஜாதியில் இல்லாவிட்டால் வேறு யாரோடு போனால்தான் என்ன? முதலிக்கும் சாயபுக்கும் என்னடி வித்தியாசம் மொட்டை ஒன்றுதானே, உனக்கு என்னத்துக்கடி இத்தனை ஆத்திரம்.

தாய்:—சுக்கூர் அவாத்திலே பொண்ணை மூடி போட்டல்லவா வெச்சூடுவா இனி அவளைப் பார்க்க முடியுமா.

தகப்பன்:—நீ வேணுமன்னா அவாத்துக்கு போய்தினம் பாத்துட்டு வாடி யாரு வரண்டாமென்றா.

தாய்:—சரி சரி அவாத்துக்கு போனா நாலுபேரு என்ன சொல்லுவா.

தகப்பன்:—என்னமோ சொல்லுவா நான் சம்மதிச்சா அப்பரம் யார்டீ கேக்ரெவா—இனி அப்படித்தாண்டி எல்லாம் ராஜகோபாலாச்சாரியார் சேட்டுக்கு பெண் கொடுக்கலையா?

சூரியராவ் நாயுடு ஒரு சாயபுக்கு பெண் கொடுக்கலையா நீலகண்டசாஸ்திரி வெள்ளைக்காரனுக்கு பெண் கொடுக்கலையா? சடோபாத்தியாயா நாயுடுக்கு பெண்கொடுக்கவில்லையா? நாம்தானா கெட்டுப்போயிட்டோம். அதுவும் நாமா கல்யாணம் செய்து கொடுத்தமா அவளே ஓடிட்டா.

நமக்கு என்னடிபயம் ரூ 7000 மிச்ச மாச்சடி சுக்கூர் அவப்பா சிபார்சிலே நம்ம மணிக்கிகூட ஒரு உத்தியோகம் வந்துடும், நீ ஒண்ணும் சத்தம் போடாதே. யாராவது கேட்

## "அவர்கள் ஜீவியம் செந்தேன்."

[மு. த. வேலாயுதம்.]

விருத்தம்.

1. முன்னொரு நாள் கந்தப்பன் வயல்கள் காக்க
முழுநிலவு தனில்மிகவுங் களிப்படைந்தே
தன்மையுடன் தடியொன்றைக் கரத்திலேந்தித்
தகைமையாய் நிலத்திற்குச் செல்லுங்காலை
புன்னைமரம் வளர்ந்திருக்கும் ஒற்றைப்பாதை
பூமணக்கும் வழிகடந்து செல்லும்போதில்
மின்னனைய ஓர்உருவம் கண்டான் ஆ! அதன்
மீதுமனம் பாய்ந்ததனால் மிகவும் சோர்ந்தான்.

2. அவ்வுருவந் தனையணுகிப் பயமொழித்து
அன்புடன் பார்த்திடுகையிலே துடிதுடித்தான்
செவ்வியநல் லுருவமோ தூக்கில் மாட்டிச்
செத்துவிடப் போகுமொரு காட்சிதன்னை
ஒவ்வாமை கண்டவனும் ஊக்கமோடே
உயிர்வதைக்குங் கயிறு துகள் ஆகச்செய்தான்
அவ்வுயிருந் தப்பியே பூமியின்மேல்
அசைவற்று விழுந்ததுவே! அந்தோ! அந்தோ!

3. களைப் படைந்த அவ்வுருவம் மதியின்நீழல்
கடந்து வெளி யேவரவும் களிப்புக்கொண்டே
இளைப்பாற்றிப் பெருமகிழ்வால் நோக்கிநின்றான்
எழில் மடவா ளாயிருக்கக் கண் டுவந்தான்

---

டால் காங்கிரஸ்காரர் கேட்டா இந்து முஸ்லீம் ஒற்றுமை என்று சொல்லடி. ஜஸ்டிஸ்காரர் கேட்டா சுயமரியாதையில் சேர்ந்துட்டோம் என்று சொல்லடி, அப்பரம் யார் நமமண்டை வருவா பாப்போம்.

தாய்:—சரி பகவானே காலம் இப்படியா கெட்டுப்போக ணும்?

தகப்பன்:—என்னடி கெட்டுப்போச்சி? நாளவருஷத்துக்கும் பார்டீ சேஷ"குட்டி தங்க விக்கிரகமாட்டமா பிள்ளை பெத்து டப்போரா எங்கயோ அவா சௌக்கியமாய் இருந்தால் சரி, போய் வேலையைப்பார்.

விளைவதற்குக் காரணமே தென்கொலென்றே
விவரித்துக் கந்தப்பன் கேட்குங்காலை
இளைத்தமன துடையவளும் இவைகள் சொல்வாள்
இன்பமுடன் எழில்வாயால் இனிமையாக.

4. "நான் வெறுக்கும் உயிரதனைக் காக்கவந்த
நாயகமே இப்புவியில் நான்ஓர்பெண்ணாய்
ஏன்பிறந்தேன்? ஐயகோ! என்றனுக்கோ
இன்பமிலை எனின்இதுதான் முறைமையாமோ?
வான்புகழென் தந்தையவர் மணியக்காரர்
வண்மைமிகும் அவர்பெயர்தாம் வரதப்பிள்ளை
தான்ய நில புலங்களுக்கோ குறைவில்லாத
தனிகருக்கு நான்புதல்வி யாய்ப்பிறந்தேன்.

5. எனக்கேழு வயதுறும் போதென்றன் தந்தை
இதமுடனே கலியாணஞ் செய்தார் அந்த
மணக் கோலம் என்றனுக்கே கனவுபோலாம்
மாண்டிட்டார் ஈராண்டில் கணவர் அந்தக்
கணமுதல் யான் கடும்விதவை யாகின்றேன்
கவலைதரும் வயதிப்போ திருபதாகும்
பிணமெனவே கருதிவரும் ஏழையேற்குப்
பெரும்புவியில் இன்பவாழ் வில்லை அன்றோ?

6. எத்தனைநாள் இயற்கையுடன் போர் தொடுப்பேன்?
எத்தனைநாள் சமுதாயத் தீச்சகிப்பேன்?
எத்தனைநாள் வைதீகக் கொடுமை தன்னை
ஏற்றிடுவேன்? ஈதென்னை? முறைமையாமோ?
இத்தரையில் இன்பசுகம் இம்மிதானும்
இலையென்னில் ஏதுபயன்? ஆதலாலே
எத்தனித்தேன் உயிர்முடிக்க உண்மை இஃதே
எண்ணிடுவீர்! என் கருத்தை எண்ணுவீரே"

7. நங்கையவள் சொற்கேட்ட கந்தப்பன்தான்
நன்மையதா யிவையெடுத்தே சொல்லுகின்றான்:—
"திங்கள்முகம் படைத்திட்டோய்! நல்விவாகம்
செய்தறியா வாலிபன்யான்! செய்கையற்றே
எங்குமுறும் விதவை துயர் அறிகுவேன் நான்
என் துணைவி இன்றுமுதல் நீயேயென்பேன்
தங்கிடவா என்னகத்தே! தளரமாட்டேன்
சமயமொடு சாதியிவை தூளாய்ச்செய்வேன்

# பேய் அழுக்குமா?

S. சிவப்பிரகாசம்.

மூடநம்பிக்கையைப் போக்கும் மூன்று கதைகளில்
டாக்டர் சொன்ன

## இரண்டாவது கதை.

———)○(———

(முதல்கதை சென்றமாதம் வெளியிடப்பட்டது.)

டாக்டர், இதோ என் கதை! மிகப் பிரியமானது; ஆனால் சிறியது என்றார். அங்கிருந்தோர் சொல்லுங்கள் கேட்கின்றோம் என்றார்கள். டாக்டர் பின் வருமாறு சொல்லத் தொடங்கினார்.

### பச்சை நிற அறை.

1888-ம் ஆண்டில், வாலிபப் பணக்காரப் பிரபு ஒருவர் இங்கிலாண்டில் வாசம் செய்துவந்தார். அவர் பெயர் லார்ட் மக் மோ. (*Lard Mac-Mau.*) ஸ்காட்லண்ட் தேசத்து மலைகள் சூழ்ந்தவிடத்தில், இவரின் தகப்பனார் சொத்துக்கள் இருந்தன. அங்கு பழங்கட்டடம் ஒன்றும் இருந்தது. இவர் பெற்றோர் மாண்டுபோனதால், அச்சொத்துக்கள் லார்ட் மக்மோவுக்கே கிடைத்தன.

---

8. இவ்வண்ணல் கூறியதைக் கேட்டிருந்த
எழிலிடையாள் அகங்குளிர்ந்தாள் அன்புதன்னில்
ஒவ்விஇரு மனமுமே உயர்ச்சிகொள்ள
ஒருயிராய் ஈருயிரும் ஆயிற்றம்மா!
செவ்விய ஈரிரண்டிதழும் காதல் தன்னாற்
சேர்ந்திடவு மகங்குளிர்ந்தே யின்பமூர்ந்தார்!
இவ்வுலகம் அவர்களுக்குக் கரும்பாயிற்றாம்!
இனி அவர்கள் ஜீவியமோ செந்தேன் கண்டாய்!

———)0(———

அப்பழங் கட்டிடத்தில் ஓர் அறைதான் உண்டு. அது தான் பச்சை நிற அறை. அதனுள்ளிருக்கும் கட்டில், திரை கதவு முதலியவைகளெல்லாம் பச்சை நிறம் பூசப்பெற்றவை. அந்த அறையில் படுத்துறங்குவதென்றால் யாவருக்கும் பயம். ஏனெனில், அப்பச்சை நிற அறைக்குள், பேய்கள் குடியிருந்து வருகின்றனவென்று அங்குள்ளோர் கூறுவதுண்டு.

அவர்கள் அப்படிக் கூறுவதற்குக் காரணம்: அவ்வீட்டில் வசித்தோர் கோர மரணம் அடைந்ததுதான். இதை நம்பாத சிலர், அவ்வறைக்குள் படுத்தும் பார்த்திருக்கிறார்கள். அப்படிப் படுத்தவர்களில் இரண்டொருவர் தவிர, மற்றவரெல்லாம் பொழுது விடிவதற்குள் பிணமாகவும்—குற்றுயிராய்க் கிடந்து பின் மாண்டும் போனார்கள். அதிர்ஷ்டவசமாகத் தப்பித்த இரண்டொருவரோ சொல்லொணா வாதையுற்றதோடு, அவர்கள் தேகம் சுகமடைய ஏழெட்டு மாதங்கள் சென்றன. இந்நிகழ்ச்சியை அறிந்தபின் யார்தான் அவ்வறையில் படுக்கத்துணிவார்?

லார்ட் மக்மோ என்பவர் தமது நிலத்தின் மாசூல் அறுவடையை முன்னிட்டு ஸ்காட்லண்டுக்குச் சென்றிருந்தார். அப்போது அவரது வேலையாட்கள், அவ்வறையைப்பற்றிய உண்மை விஷயங்களை அவரிடம் சொன்னார்கள். லார்ட் மக்மோ நன்கு படித்தவர்; அறிவாளி. அவர் இதுபோன்ற மூட நம்பிக்கைகளை நம்புவதில்லை. "நாம் இங்கிலாந்திலிருந்தால் தம் இஷ்டம்போல் வேலை செய்யலாம் என்ற எண்ணத்தோடு நம்மிடம் புளுகுகிறார்கள்" என்று மக்மோ எண்ணினார். உடனே அவர் பண்ணையாட்களின் தலைவனிடம், "நான் இங்கிருக்கும் வரை அந்த அறையில்தான் படுத்துக் கொள்ளப்போகிறேன்" என்றார். அதற்குப் பண்ணையாட்களின் தலைவன் "நல்லது" எனத் தலையசைத்து பிறகு சொல்லுகிறான்:—"ஐயா, நான் உண்மையைச் சொல்லுகிறேன்; அந்த அறையில் அதியற்புதமான வேலைகள் நடக்கின்றன! நீங்கள் அதில் படுத்ீர்களானால், ஏன் வீம்புக்காக இதில் படுத்தோம் என்றுகஸ்தியடைவீர். வேறொன்றும் நேராது—உங்கள் உயிருக்குத்தான் ஆபத்து நேரும்!"

இவ்வார்த்தையைக் கேட்ட பிரபு கொஞ்சம் கடுமையான குரலில், "நான் இன்றிரவு அந்த அறையில்தான் படுத்துக் கொள்ளப்போகிறேன்; நீ அந்த அறையைச் சுத்தம் செய்து வை!" என்றார். தங்கள் சித்தம் என்றான் பண்ணையாட்களின் தலைவன்.

இரவு வந்தது! தமது போஜனத்தை முடித்துக்கொண்டு, படுப்பதற்காக அவ்வறைக்குச் சென்றார். அறை சிறிய அறைதான்; ஆனால், நன்கு ஜோடிக்கப்பட்டிருந்தது! பிரபு தமக்குத் துணையாக ஓர் ரிவால்வாரைமட்டும் எடுத்துச்சென்றார். அதை அவர் தமது படுக்கையின் பக்கத்திலிருந்த மேஜையின் மீது வைத்துவிட்டுச் சயனித்துக்கொண்டார். சிறிது நேரத்திற்குள், அமைதியாகவே நித்திரையின் வயப்பட்டார் பிரபு.

சில மணி நேரம் சென்றன. அவர் உடம்பெல்லாம் ஒருமாதிரி அசௌகர்யமாய்த் தோன்றிற்றாம்! பிறகு திடீரென, ஓர் பெரும் பளுவைத் தம் தேகத்தில் ஏற்றியதுபோல் இருந்ததாம்! மூச்சும் விடமுடியவில்லையாம்! மயக்கமும் இருந்ததாம்! அவர் முன் பல தேவதைகளும் விகார உருக்களும், தோன்றி அவரைத் துன்புறுத்தினவாம்! அப்போது அவர் தூக்கத்தைக் கலைத்து எழுந்திருக்க முயன்றும் பயன்படாமற் போயிற்றாம். பொழுது விடிந்தபின்தான் எழுந்திருக்க முடிந்ததாம்.

நன்கு விடிந்துவிட்டது. பிரபு வெளியில் வந்தார் அவர் முகமெல்லாம் வெளுத்துப்போயிருந்தன! பிரபுவைப் பார்த்தவர்கள் "பிரபுவின் ரத்தத்தையெல்லாம பேய் உறிஞ்சிவிட்டது; அதனால்தான் முகம் வெளுத்துப்போயிருக்கிறது!" என்றும், "சந்தன படையாய்விட்டார்" என்றும், இனித்தேறமாட்டார் என்றும் பேலவாறு பேசிக்கெண்டார்கள்.

ஆனால் பிரபுவோ, இத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்ததற்குக் காரணம் அந்த அறை சுமார் 50-ஆண்டுகளாய் புழக்கமில்லாதிருந்ததாலும், அறையின் ஜன்னலுக்கருகில் ஓர் குளமிருப்பதினாலும், அக்குளத்தின் தண்ணீர் தேங்கிநிற்பதால் அதினின்று எழும்விஷக்காற்றுகள் பலவிதக்கொள்ளை நோய்களை (Miasmes pestilentiels) உண்டுபண்ணுவதாயிருப்பதாலும் நமக்கு இத்தொந்தரவுகள் நேர்ந்தன என்ற முடிவுக்கு வந்தார். உடனே பண்ணையாட்களின் தலைவனை அழைத்து அந்தக்குளத்தைத் தூர்த்துவிடுமாறும், அவ்வறையினுள் ஓர் பெருந் தீ மூட்டி விஷக்காற்றை எறித்து சுத்தப்படுத்துமாறும் கட்டளையிட்டார்.

இதற்கு அப்பண்ணையாட்களின் தலைவன், "இன்னும் இரண்டு மூன்று தினங்களில் உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்வீர்களென்றும், முதல் நாள் நடந்த சம்பவமே போதியது என்றும் நினைக்கிறேன்" என்றான்.

இல்லை இல்லை! இனியும் அந்த அறையில்தான் படுத்துக்கொள்ளப்போகிறேன் என்றார் பிரபு.

நாலைந்து நாள் சென்றன. பிரவின் கட்டளைப்படி அறை சுத்தப்படுத்தப்பட்டது; குளமும் தூர்க்கப்பட்டது.

ஒரு நாள் இரவு! பிரபு மறுமுறையும் படுப்பதற்காக அவ்வறைக்குச் சென்றார். பண்ணைத்தலைவனுக்கோ மனந்தாளவில்லை. உடனே அவன் பிரபுவைப் பார்த்து, நான் தங்கள் அருகில் துணையாகப்படுத்துக் கொள்ளவாவது உத்தரவு கொடுங்கள்'' எனக் கெஞ்சிய முறையில் கேட்டான். அதற்குப் பிரபு, ''நான் தனியாகத்தான் படுத்துக்கொள்ளப்போகிறேன்; அங்கு யாரும் வரவேண்டியதில்லை'' என்று சொல்லிக் கொண்டே அவ்வறைக்குட் சென்று கதவைத்தாளிட்டுப் படுத்துக்கொண்டார்.

நடு நிசி! அவ்வறையி ருந்து சப்தங்கள் கிளம்பின! உடனே பண்ணைத் தலைவன் திடுக்கிட்டு அவ்வறையினருகே ஓடிவந்து சப்தத்தை உற்றுக்கேட்டான். அச்சப்தம், பிரபுவின் வாயிலிருந்து தடைபட்டுத் தடுமாறிக் கிளம்பும் கூச்சல்களும் வார்த்தைகளும் என அறிந்தான். என் செய்வது? பிரபுவோ தமக்குத் துணைவேண்டியதில்லை என்று மறுத்துவிட்டதால், பண்ணைத் தலைவனும் மற்ற வேலையாட்களும் உட்செல்ல முடியாமல் தவித்தார்கள். அச்சப்தம் வெகு நேரம் வரை கேட்டுக்கொண்டே இருந்தது. பிறகு அமைதி நிலவியபின் வேலையாட்கள் படுத்துறங்கினர்.

பொழுது விடிந்தது. பிரபு வெளி வருவாரென்று வேலையாட்கள் எதிர்பார்த்தனர். அப்போதும் வரவில்லை. உடனே பண்ணையாட்களின் தலைவன், பிரபுவுக்கு ஏதோ அபாயம் நேரிட்டிருக்க வேண்டுமென்றெண்ணிக் கதவையுடைத்து அறையினுட் புகுந்தான்.

வெளுத்த முகத்துடன் பிணம்போல் அசைவற்றுக் கிடந்தார் மக்மோ பிரபு! அவரது வேலையாட்களும், மற்றவர்களும் அவரைச் சூழ்ந்துகொண்டனர். பிரபு உயிரற்றவராகவே காணப்பட்டார்! உடனே பண்ணைத் தலைவன் அவர் மார்மீது கை வைத்துப் பார்த்தான்; இதயமட்டும் படபடவென்றடித்துக்கொண்டிருந்தது!

உடனே பண்ணைத் தலைவன், அவ்வூர் பிரக்கியாதி பெற்ற டாக்டர் டய்லோ (Taylor) என்பரை அழைத்து வந்தான். அந்த டாக்டர் தமது முயற்சியால் பிரபுவை உயிர் பெறச்செய்தார்!

சில நிமிடங் கழிந்தன; பிரபுவுக்குப் பேசத்துணிவு ஏற் பட்டது; உடனே அவர், அன்றிரவு நடந்த பயங்கரச் சம்ப வங்களைப் பின்வருமாறு டாக்டரிடம் சொன்னார்.

"நான் இவ்வறையில் படுத்தவுடன் சுகமாக நித்திரை வந்தது. சிறிது நேரத்திற்குள்—அதாவது நான் தூங்கிய நிலைக்கும் விழித்த நிலைக்கும் மத்திய நிலையிலிருக்கையில் ஓர் பச்சை நிறப்பேய் என் எதிரில் வந்து நின்று, தன் கோர உருவைக் காட்டி என்மீது பாய்ந்தது! உடனே தன் கூரிய நகங்களை என் மார்மீது வைத்து அழுத்தி—என்னைச் சின் னபின்னப்படுத்தி—வெகுநேரம் வரை எனக்குப் பெரும் வா தையைத் தந்தது! இதுதான் நடந்த சேதி" என்றார்.

இச்செய்திகளைக் கேட்ட டாக்டர் பிரபுவைப் பார்த்து, பிரபுவே! நீங்கள் இஷ்டப்பட்டால்—உங்கள் உயிருக்கு இம் முறை ஆபத்துவிளைவித்த அப்பேயை, நான் இவ்விடம் விட்டு ஓட்டிவிடுகிறேன் என்றார்.

பிரபு:—அது எப்படி?

டாக்டர்:—உங்கள் உடம்பில் விஷமேறி இருக்கிறது!

பிரபு:—யாரால்? எப்படி?

உடனே டாக்டர், அங்கிருந்த புத்தக அலமாரியைத் திறந்து ஓர் புத்தகத்தை எடுத்து அதை ஆட்டிக் குலுக்கி னார். அதிலிருந்து விழுந்த பச்சை நிறத் தூசியைக் காட்டி, "இந்த விஷந்தான்! கொடிய விஷங்களில் இதுவும் ஒன்று! இவ்விஷம் அர்செனிக் (Arsenic) என்னும் பாஷாண லோக மும் செம்பும் கலந்தது" என்றார்.

பிரபு:—ஆனால் அவ்விஷம் எங்கிருந்து வந்தது?

டாக்டர்:—எவர்மீதும் குறை கூறுவதற்கில்லை; ஆனால் ஒரே ஒரு தவறு. அது என்னவெனில், இந்த அறைக்குப் பச்சைவர்ணம் கொடுத்ததுதான். அவ்வர்ணம், மேற்கூறிய

இரண்டு உலோகத்தினின்றும் எடுக்கப்பட்டதென்று, வர்ணம் பூசுபவர்களுக்கு நன்றாய்த்தெரியும். மேலும் அது ஷீல் (Scheele) என்னும் ரசாயன சாஸ்திரியால கண்டுபிடிக்கப்பட்டதால், அவ்வர்ணத்திற்கு அவர் பெயரும் கூடி வழங்குகிறது. (Vert de Scheele). இப்பாஷாணத்தின ஜுணாதிசயத்தைத்தான் நீர் பார்த்தீர்! வர்ணங்கொடுத்து நீண்ட காலமாகிவிட்டதால், தாளில் கொடுத்த வர்ணங்கள் உலர்ந்து தூசியாய் மாறிவிட்டது. சுவரின் மேல்பாகங்களும் உலர்ந்திருக்கிறது. அத்தூசிகள் அறைமுழுதும படிந்திருக்க, நீங்கள் நடக்கும்போதும், திரை முதலியவற்றை உதறிச் சுத்தப்படுத்தும்போதும் அத்தூசிகள் எழும்பிக் காற்றோடு கலந்துகொண்டன. பின்பு சுவாசத்தின் வழியாக அத்தூசிகள் உம் உடலில் புகுந்து, இத்தகைய ஆபத்துக்களாக்கிவிட்டது!

பச்சை நிறப்பேய் தோன்றியதற்குக் காரணமென்னவெனில், விஷ தூசிகளால், எற்பட்ட மூச்சடைப்பும்—ஜுரத்தால் தாக்கப்பட்ட உமது மூளையுமே! இதோபோல்தான், கடின நோய் வாய்ப்பட்டவாகள் காணும் பயங்கரக் கனவுகளும் காட்சிகளும்! என்று சொல்லிப் பிரபுவுக்குத்தக்க மருந்துகள் கொடுத்து சொஸ்தப்படுத்தினார்.

அதன் பின் பிரபு, அவ்வீட்டுச் சுவரின் மேற்படைகளையெல்லாம் இடித்தெறியச் செய்து மஞ்சள் நிறம் பூசுவித்ததோடு, திரை முதலியவற்றையும் மாற்றி அறையைச் சுத்தப்படுத்தினார், அதுமுதல் பிரபு பேயையும் பிசாசையும் காணாமல், மீதிக்காலத்தை அவ்வறையிலேயே கழித்தார்!

என்று டாக்டர் தமது கதையை முடித்துவிட்டு, "உங்கள் முறை வந்துவிட்டது; நீங்கள் சொல்லுங்கள் என என் தந்தையைக் கேட்டுக்கொண்டார்.

---

தென்னிந்தியாவில் பஞ்சமர்களை எந்தநாளும் தீண்டாதவர்களாகவும், அடிமைகளாகவும் தாழ்த்தி வைக்க பிரத்தியேகம் சூழ்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

ராவ் பகதூர் எம். சி. ராஜா.

# காமுவின் சுய சரிதை.

ஜே. பி. கிருஷ்ணன்.

---

நான் ஒரு விதவைப்பெண். துயரத்தில் மீந்தியவள்.

தற்போது நானிருக்கும் நிலைமையில் என் சுயசரிதத்தை உலகிற்குச்சொல்லிவிட என் மனம் தூண்டுகிறது. எதையும் ஒளிக்காமல் கூறுகிறேன்.

சகோதரிகள் மன்னிக்கவேண்டும்!

எனக்கு "பொம்மை"க்கலியாணம்செய்விக்கும்பொழுது, நான் எங்கள் கிராமாந்திரப் பள்ளிக்கூடத்தில்3-வது வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தேன். எனக்கு வயது9. ஆம்! எனக்கு ஞாபகமிருக்கிறது. "பொம்மைக்"கணவராக மணையில் என்னருகில் வீற்றிருந்தவர் ஒரு சுந்தர வாலிபன். அவனது தோற்றம் எனது பள்ளித்தோழன் சீனுவின் தோற்றத்தை ஒத்திருந்தது. ஆனால் உண்மையில் அவன் சீனுவாக இருந்தால் நான் ரொம்ப சந்தோஷப் பட்டிருப்பேன்.

சீனுவும் நானும் "புருஷன் மனைவி" விளையாட்டு எத்தனையோ தடவை விளையாடியிருக்கிறோம். அந்த விளையாட்டில் எங்களுக்கு ஒரு தனிப்பிரியம்! ஆனால் இந்தப் புதிய வாலிபனோடு அந்த விளையாட்டு விளையாட எனக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும் பெற்றோர்களால் "செல்லமாக" வற்புறுத்தப்பட்டேன்! கலியாண முடிவில் "இனிமேல் இவர்தாண்டி உன் ஆம்படையான். இனிமேல் சீனுவோடு "ஆம்படையான் விளையாட்டு" "விளையாடாதே!" என்று என் தாய் சொன்னாள். என்மனசு 'பகீ'ரென்றது! "ஊ...ஹூம்...நான் சீனுவோடு தான் விளையாடுவேன்," என்று கூறினேன், கண்களில் நீர் ததும்ப!

என் தாய் பதிலளிக்கவில்லை. அன்போடு என்னையணைத்துக் கண்ணீரைத் துடைத்தாள், என் குழந்தையுள்ளம் பலப்பல எண்ணியது; கலங்கியது.

உண்மையாகவே என் 12-வது வயதிலே தான் "கலியாணம்" என்பதற்குச் சரியான அர்த்தமும், நான் ஒருவனுக்கு

"மனைவி" என்பதையும் தெரியலானேன். முன்போல சீனு வும் என்னோடு விளையாட வருவதில்லை, என் படிப்பிற்கும் முற்றுப்புள்ளி வைத்தாய் விட்டது. பின்னும் சிலநாட்களில், சீனு மேல் படிப்புக்காக பட்டணம் சென்று விட்டான். ஆனால் சீனுவின் வடிவை அவனது அன்பை என்னால் மறக்க முடியவில்லை. சதா அவனது ஞாபகம்!

ஃ ஃ ஃ

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது! அன்று மாலை தபாற்சேவகன் எங்கள் வீட்டில் நுழைந்து விட்டுப்போனான். கொஞ்சநேரத்தில் வீட்டிற்குள் ஒரே அழுகை! ஏகப்பட்ட கூக்குரல் பல அம்மாமிகளின் ஒப்பாரி! சில பெண்கள் என் னையும் கட்டிக்கொண்டு அழுதார்கள், எனக்கு ஒன்றுமே புரியவில்லை! மிரள மிரள விழித்தேன்! அவர்கள் அழுவ தைப்பார்க்க எனக்குங்கூட அழுகை வந்தது. ஆனால் நெடு நேரத்திற்கப்பால் தான் எல்லோரும் அழுவதின் காரணம் தெரிந்தது.

"எனக்குக் கணவராக்கப்பட்ட கோபாலன் என்ற வாலி பன் 3-வது முறையாக சென்னை கலாசாலையில் "பி. ஏ." வகுப்பில் தேறாமையால், மனமுடைந்து சமுத்திரத்திலே வீழ்ந்து "தற்கொலை" செய்துகொண்டாராம், சம்மந்திகள் பட்டணத்திலிருந்து தந்தியடித்திருக்கிறார்கள்.

நான்கூட கொஞ்சம் வருத்தப்பட்டேன், வாய்விட்டுக்க தற அப்படி என்ன நேர்ந்துவிட்டதென்பது எனக்கு விளங்க வில்லை! ஆனால் இனி நான் "விதவை"! என்பதை அறிய மாட்டேன். அதனால் ஏற்படும் கொடுமை எனக்குத் தெரி யாது.

சுருக்குகிறேன், எனக்கு வெள்ளைச்சேலையுடுக்கப்பட்ட தையும், என் தலையைச்சிறைக்க சில சாஸ்திரிகள் அபார முயற்சி செய்ததையும், அது என் மாமனாரால்—கணவனின் தந்தையால்—தடுக்கப்பட்டதையும், நான் கொண்ட துக்கத் தையும் விவரிப்பதென்றால் நீண்டுவிடும்.

நான், என் மாமனாரால் சென்னையிலுள்ள அவர் வீட் டுக்கே அழைத்துச் செல்லப்பட்டேன். அவர் பெரிய பணக் காரரென்பதும், அவருக்கு இறந்து விட்ட என் கணவன் ஒரே பிள்ளையென்பதும், எனக்குத்தெரிந்தது. என் மாமன்

மாமிகளால் நான் சொந்தப் பிள்ளையைப் போன்று "செல்ல"மாக போஷிக்கப்பட்டு வந்தேன். குறிப்பாக என் மாமனார் என்னிடம் உயிரையே வைத்திருந்தார்! என்னை என் பெற்றோர்களிடம் அனுப்பமறுத்துவிட்டனர், என்பெற்றோர்களுக்கும், என்னைப்போன்ற இன்னும் பல பெண்களிருப்பதாலும் கொஞ்சம் ஏழ்மை நிலையாததாலும், என்னைச்சிறிது சிறிதாக மறந்தனர். எனக்கும் மாமி வீடு மனம் பிடித்துவிட்டது. பட்டிக்காட்டுப்பெண்கள் பட்டணவாசத்தை விரும்புவது இயற்கைதானே!

ஃ ஃ ஃ

என் மாமனாராகிய சுந்தரேசய்யருக்கு வயது 40 இருக்கும். சென்னையில் பழுத்த தேசபக்தர்! காந்தியின் சிஷ்யர், வருணாச்சிரமப்பிரியர்! ஆசார அனுஷ்டானங்களில் குறைவில்லை! கடவுள், மதம், சாஸ்திரம், குரங்குப்பிடி! ஆனால் இப்பேர்ப்பட்ட "சாஸ்திரக்ஞர்" என கூந்தலுக்கு வந்த விபத்தைத் தடுத்தாரே! சாஸ்திர சம்பிரதாயங்களையும் விட்டு, என்பதைக்குறித்துத்தான் ஆச்சரியப்பட்டேன். "லாபமில்லாமல் செட்டி ஆற்றில் இறங்குவானா?" என்பார்கள் பழமொழி, இந்த உண்மையைப் பின்னாலறிந்தேன்! எனக்கு 16-வயது பூர்த்தியாயிற்று, தற்புகழ்ச்சியல்ல, உண்மையாக நான் ஒரு வனப்புமிக்கவனிதையாக விளங்கினேன்! வாலிபத்தின் சிகரத்தில் ஒரு அழகிய நட்சத்திரமாக மின்னினேன்! என்னைக்காணும் பல வாலிபர்கள் "சொக்கி"ப்போய் மனம் கலங்குவதையறிந்தேன், எனக்கு செயற்கையழகில்லை, பட்டுப் பட்டாடைகளும் நகைநட்டுக்களுமில்லை, என் இயற்கையழகே எண்ணற்ற வாலிபர்களின் கண் வீச்சை என்பால் எறியச்செய்தது.

என் தேகத்தில் ஒரு புத்துணர்ச்சி! மனத்துள் ஏதோ ஒரு விதமான "இன்பச்சபலம்!" பற்பல ஆசை எண்ணங்கள் ஊறிற்று! என் உடல் எதையோ நாடித்துடித்தது! ஆனால் நான் அதிர்ஷ்டக் கட்டை! பாப ஜென்மம்! விதவை!

வேப்பமரத்திற்கும் அரசமரத்திற்கும் "திருமணம்" செய்கின்றனர், அவைகள் மனித சுபாவமற்றவை! உணர்ச்சியற்றவை, ஆனாலும் அது புண்ணியமாம்! திக்கற்ற எனக்கு ஒரு "மறுமணம்" செய்விக்கப் "புனித"மான சாஸ்திரங்கள்

மூட்டுக்கட்டை போடுகின்றன! ஆ! என்னே! மனிதாபிமான மற்ற சாத்திரங்கள்!

காக்கைகள் குருவிகள் களிப்புடன் கூடும்! இன்பத்தை நாடும்! அதைப் பார்க்க நேர்ந்தால் என் உயிர் வாடும்! உடல் பதைக்கும்! மனதை விட்டுச்சொல்லுகிறேன். நான் காமச் சித்திர வதைக்காளானேன்! கருத்தழிந்தேன்!

அன்று மைலாப்பூரில் ஒரு கலியாண வீட்டிற்குச் சென்ற என் மாமி இரவு அங்கேயே தங்கிவிட்டார்கள். எங்கள் வீட்டில் நானும் என் மாமனாரும் மட்டும் தானிருந்தோம். இந்த "அசந்தர்ப்பம்" எனக்கு ரொம்ப அச்சத்தையும், நாணத்தையும், விளைவித்தது. இருந்தாலும் அவர் என்னிடம் ரொம்ப அன்புடையவர். அப்படியொன்றும் "கெடுதல்" நேர்ந்துவிடாதென்று மனதைத் தேற்றிக்கொண்டேன், இருந்தாலும் ஒரு மூலையில் சிறு "குழப்பம்"! திகில்!

எனக்குச்சரியாக தூக்கம் வரவில்லை. விழித்த நிலையில் என்னென்னமோகனவுகள்! நடு இரவு. அவர் படுத்திருந்த அறையில் அவரது குரல் மெதுவாக, ஆனால் துன்பக் கலப்புடன் கேட்டது!

"ஐயோ! அப்பா! வலிக்கிறதே! பொறுக்க முடியவில்லையே! காமு! காமு! நீயாவது உதவி செய்யக் கூடாதா? எனக்கு யாருமில்லையா?" என்று முக்கி முணகிக் கொண்டிருந்தார் அவர். இதைக் கேட்க எனக்குச் சகிக்கவில்லை. தந்தையினும் மேலாக என்னையாதரித்தவரல்லவா? என் மனம் இளகித்துடித்தது! விரைவாக அவரது அறைக்குள் நுழைந்தேன். ஆம்! அவர் அலங்கோலமாகப்படுத்துக் கொண்டு கைகளால் இடுப்பை அழுத்திக்கொண்டிருந்தார். அருகில் சென்றேன்.

காமு! ஐயோ! என்னால் தாங்க முடியவில்லை இடுப்பு வலி! சற்று அழுத்திப் பிடியம்மா!" என்றார் பரிதாபமான குரலில்.

நான் கபடு சூதற்று அவர் தேகத்தைத் தொட்டு அழுத்தினேன்! வலியுள்ள இடத்தைப்பிடித்துவிட்டேன், ஆனால்! அந்தோ! அதன் விளைவு என்ன வாயிற்று? என் கைகள்

நடுங்குகிறது! எப்படியோ என்னை அவர் ஆகர்ஷித்து விட்டார்! நான் என்னையறியாமலே அவருக்குள் ஐக்கியமாய் விட்டேன்! எங்கள் உடலும், உணர்ச்சியும் கலந்துவிட்டன!

இது மகாபாதகச் செயலல்லவா? ஆனால் நான் அபலை! உலகத்தை யறியாதவள்! பேதை! நான் மயங்குவது சுலபம்! ஆனால் என் மாமனாரோ, ஒருபெரிய தேசபக்த வருணாச்சிர மதர்மி!'' மணிதாபிமானி! ஆசார சீலர்!

நினைக்க நினைக்க என்மனசு நடுங்கியது! தேகம் பதறியது! அழுகை பீரிட்டது: "நீ அழிந்து விட்டாய்!'' என்று என் மனது என்னை இடித்தது! என் தூய வாழ்க்கையிலே இருட் படலம் வீழ்ந்து விட்டது! அந்தோ! நான் வழுக்கி விழுந்து விட்டேன்! அல்ல—வீழ்த்தப்பட்டேன்!

ஆனால் அந்த இன்பம் புதிது! மறக்க முடியாதது! மீண்டும் அந்த இன்ப வெறியிலே திளைக்கப்பட்டேன். அனுபவித்தேன்!

எங்கள் காமக்காதல் கரைபுரண்டு என் மாமியின் நெஞ்சைத்தாக்கியது. மிகவும் வருந்தினார்கள்! துயருற்றார்கள். எங்களைக் கண்டிக்கவும் செய்தார்கள். ஆனால் ஒரு பெண்பால், மானாபிமானத்திற்கஞ்சுபவர், அவர்களால் என்ன முடியும்?

யோக்கியமான முறையிலே கலியாணம் செய்துகொண்டு வயிற்றிலே ஒரு "பூச்சிப்புழுகு'' வைக்காதா வென்று கோயில் குளங்கள் சுற்றி, எங்கள் பார்ப்பனருக்கு "அழுபவர்கள்'' எத்தனைபேர்? பாழாய்ப்போன அந்தச் சாமிக்குக்கண்ணில்லை! கேட்பதற்குக் காதுமில்லை! அறிவதற்கு புத்தியுமில்லை!

நாங்கள் அனுபவித்து வந்த சுகத்திற்கிடையூறாக என் வயிற்றிலே "கரு'' தரித்தது! அந்தோ! அப்பொழுது நானடைந்த வேதனைக்களவுண்டா? என்பாதி உயிர் போய்விட்டதைப் போலிருந்தது. மன முடைந்து, உடல் குலைந்தேன்! ஆனால் அவர் எனக்குச்சற்று தைரியமூட்டினார், தனக்கு ரொம்ப வேண்டியவரான ஒரு டாக்டர் இருப்பதாகவும், எல்லாம் "சரிப்படுத்தி விடலா'' மென்றும் சொன்னார், என்ன கோலம்!

❖ ❖ ❖

இரவு, என் அறையில் அந்த டாக்டரை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். வெட்கமும், தூக்கமும், என்னை வாட்டி வதைத்தது! காலடி யோசை கேட்டால் மனது "படக் படக்" கென்றடித்துக் கொள்ளும், குழப்பத்தோடு கூடியதில்!

* * *

மெதுவாகக் கதவு திறந்தது. அவரும் ஒரு வாலிப டாக்டரும் உள்ளே வந்தனர். அந்தோ! அந்த டாக்டரின் முகத்தைக்கண்டதும் என் தலையில் பேரிடி விழுந்த மாதிரியாயிற்று! உயிர்ப்பிணம்போல அசைவற்று நின்று விட்டேன். என்தலை சுழன்றது! அறிவு ஒடுங்கியது! நிற்க முடியாமல் கால்கள் தள்ளாடியது! திடீரென்று மயக்கத்தால் உந்தப் பட்டு கீழே சாய்ந்து விட்டேன்! அப்புறம் நடந்தது எனக் கொன்றுமே தெரியாது.

ஆனால் நான் சுயப்பிரக்ஞையோடு கண்விழித்தபோது என் அன்பார்ந்த "சீனு"வின் மார்பில் சாய்ந்திருக்கக்கண் டேன்! ஆ! என்னே! அப்போது நானடைந்த பேரின்பம்! அதற்கெல்லையுண்டா? வார்த்தையால் வருணிக்க முடியுமா? என்னையறியாமலே என்கரங்கள் சீனுவைத்தழுவியது. என் மார்பு அவன் மார்போடு ஒன்றியது. அன்பு கனிந்த ஒரு முத்தம்! பல இன்ப முத்தங்களின் பரிமாறல்! உயிர்களிக்கும் இன்பவெறியில் ஆழ்ந்தோம். நான் என்னை மறந்தேன்!

"காமு! வெளியே போனவர் வந்து விடுவார்! போதும் மறுபடியும் நாளைக்கு வருகிறேன். என் தங்கமே! இனி மேலும் உன்னை விட்டுப்பிரிந்திருக்கப்பாவி யென்னால்......" சீனுவின் கண்களில் நீர் தேங்கியது. அவன் முகத்திலே ஆசையும், துக்கமும் போரிட்டது! என் நெஞ்சில் வருத்தமும், மகிழ்ச்சியும் பொங்கியது: பரிவாக என் முந்தானையால் அவன் கண்ணீரைத்துடைத்தேன்.

வெளியே காலடியோசை கேட்டது. நான் மயக்கம் வந்தவளாகப்படுத்து விட்டேன். சீனு எனக்கு "சிகிச்சை" செய்வதாக பாவனை! சந்தேகத்திற்கிட மில்லாமல்!

"என்ன மிஸ்டர் சீனு! இப்பொழுது எப்படியிருக்கிறது? என்றார் அந்தக்காந்திமனுஷர்! "ரொம்ப நன்றாயிருக்கிறது!" என்று சொல்லிவிட எனவாய் துடித்தது. அடக்கிக் கொண்டேன்.

"சற்றுத்தேவலை. இருந்தாலும் இவ்வளவு பயமும், திகிலும் இருப்பது எப்பவுமே கெடுதல்! பாருங்கள் நான்ஒரு அன்னிய ஆடவன், இவனிடங்கூட நமது ரகசியத்தை வெளியிட நேர்ந்து விட்டதே," என்ற திகிலானது இப்பெண்ணை மயக்கத்திற் காளாக்கி விட்டது. என்னமோ நடந்தது நடந்து விட்டது. இன்னும் அதையெல்லாம் பார்த்தா ஆவது? என்றிருப்பது தான் புத்தி சாலித்தனம், இன்றைக்கு மருந்து வேண்டாம், தைரியப்படட்டும், நாளைக்கு மறுபடியும்வருகிறேன்" என்றான் சாதுர்யமாக சீனு. என்னே! சமய சஞ்சீவிப் பிரசங்கம்!

அந்த "மடிசஞ்சி"க்கு என்ன தெரியும்? பாவம்! "நாளைக்கு அவசியம் வரவேணும்" என்றது என் மாமனாராகிய அந்த தேசபக்தக் "கள்ள வேஷம்."

ஃ ஃ ஃ

மறுநாளும் சீனு வந்தான். என் "கள்ளக்கரு" அழிவதற்குச் சிகிச்சை செய்யப்பட்டது. அதனால் ஏற்பட்ட சுகக் கேடு சில நாட்கள் என்னை படுக்கவைத்து விட்டது. பின்னர் சீனு அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்தான், இருவருமாக இன்ப ஒளஷதம் உண்டு மகிழ்ந்தோம்! நான் புத்துயிர் பெற்றேன். என் மனக்குருவி இன்பம் செறிந்த ஒரு புதுக்கிளையை நாடியது. அக்கிளையும் என் வரவை ஆர்வத்தோடு ஏற்றுக்கொண்டது! என் மாமனாராகிய "தியாகி" எனக்குக்க சந்தார், உள்ளுக்குள் பரம சண்டாளராகவும், வெளிக்குப் பரம சாதுவாகவும், ஆசார சீலராகவும், நடிக்கும் அவரது செய்கையை வெறுத்தேன்! என்ன ஆச்சரியம்! அவரும் என்னை வெறுக்கத் தொடங்கினார்! காரணமின்றிக் காரியமில்லையல்லவா?

எங்கள் "மாமன்—மருகி" சம்மந்தம் எப்படியோ வெளிக்கு வந்துவிட்டது. தெருவிலே பலர் பலவிதமாகப் பேசத் தொடங்கினர். அடுப்பங்கரை அம்மாமிகள் "வம்பு" வளர்த்தனர். சென்னை முழுதும் இப்பேச்சுக் குமுறியது!

**காங்கிரஸ் தியாகிகள் "திலகர் நிதியைத்திருடிய படலம்" வெளியானபோது அடைந்த திகிலை விடப் பன்மடங்கு திகிலும் அவமானமும் அடைந்தார் என் மாமனார், அவரது உயிரையே தின்றது இந்த அபகீர்த்தி. ஆனால் இம்மாதிரி விஷயங்களைச் "சமாளிக்க" எங்கள் சாதிக்கு ஒரு தனித்திறமையுண்டு, இது நாடறிந்த விஷயம், நிற்க.**

என்னை அவர் வீட்டை விட்டுத்துரத்துவாரா? மாட்டாரா? என்பதை நான் எதிர்பார்க்கவில்லை. எங்கள் முன்னேற்பாட்டின்படி நான் சீனுவோடு வெளியேறினேன், மைலாப்பூரில் எங்கள் புதுக்குடித்தனம் ஆரம்பமாயிற்று, என் விதவைக் கோலம் பறந்தது! ஒரு நவ நாகரீக நங்கையாகத் திகழ்ந்தேன். சீனு மணமற்றவன், "நீயே எனக்கு சகதர்மிணியாக வாய்த்த பின்னர், நான் கலியாணம் வேறு செய்துகொள்ளவா?" என்று சீனு சொல்லும்போது என் உச்சி குளிரும்! பேரானந்த மெய்துவேன். எங்கள் பாலிய "விளையாட்டு விவாகத்"தை நாங்கள் மறக்கவில்லை! ஏன் நாங்கள் "சதிபதிகள்" அல்லவா? சீனுவுக்கு வைத்தியத் தொழிலில் நல்லவருயபடி, எங்கள் கிராமத்திலிருக்கும் அவனது பெற்றோர்களுக்கு அடிக்கடி பணமனுப்புவான்; நேரிலும் சென்று வருவான். எனக்குப் பெற்றோர்களின் ஞாபகம் இல்லாமலில்லை, அவர்கள் ஏழைகள், நான் கெட்டழிந்த விபரம் அவர்களுக்குத்தெரியாது. என் மாமனார் வீட்டிலேயே சுகமாக இருப்பதாகத்தான் அவர்கள் நினைப்பு. சீனுவின் மூலமாக அவர்களது க்ஷேமலாபங்களை அடிக்கடி நான் தெரிந்துகொள்வேன்.

என்னைப்பற்றிய உண்மை விஷயத்தை சீனுவாவது, என் மாமனாராவது பெற்றோர்களுக்குச் சொல்லவில்லை, ஏனெனில் இரண்டுபேரும்...............குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கத்தானே செய்யும்.

* * *

இரண்டாண்டுகள் எங்கள் "வாழ்க்கைச்சக்கரம்" பின்னமில்லாமல் ஓடிற்று! நான் எப்பொழுதும் போலத்தான் சீனுவிடம் உயிரையே வைத்திருந்தேன், அவன் இஷ்டப்படியெல்லாம் நடந்தேன். ஆனால் வரவர சீனுவின் அன்பு குறையலாயிற்று; அவன் முகத்தில் கவலைக்குறி! ஆழ்ந்த யோசனையின் சின்னம்! எங்கள் வாழ்க்கைப்படகில் ஒரு சிறு "பொத்தல்" கண்டது; என் மனத்திற்குள் திகில் நிறைந்தது. நான் 6-மாத கர்ப்பிணி வேறு! பலவிதமான சந்தேகங்கள் என் மனத்தை அறுத்தது; "அது பொய்யாக இருக்கக்கூடாதா?"

இம்முறை கிராமத்திற்குச்சென்ற சீனு ஒரு வாரமாக வரவில்லை, எப்பொழுதும் இப்படி நின்றது கிடையாது; என் மனத்தில் ஒரே குழப்பம் 8 வது நாள் சீனுவுக்கு பதில்

அவன் எழுதிய ஒரு கடிதம் வந்து சேர்ந்தது; படித்துப்பார்த்தேன். என்னால் நம்பமுடியவில்லை. மீண்டும் மீண்டும் படித்தேன்.

காமு! என் அறியாமைக்கு மன்னிக்கவும், இந்தச்சமூகத்தின் "பரபச்சின்ன"மாகிய "விதவை"யை நேசிப்பதோ, மணப்பதோ சரியானதல்ல, சாஸ்திர விரோதம்! தயவு செய்து என்னை மறந்துவிடு. என் பெற்றோர்களின் கட்டளைப்படி ரூபாய் 7000—வரதக்ஷிணையோடு ஒரு பெண்ணை மணக்க இசைந்துவிட்டேன். இனி சென்னையிலே நீ என்னைப்பார்க்க மாட்டாய். முன்னதாகக்கொடுத்துள்ள வாடகை தீரும் வரையில் நீ அந்த வீட்டிலிருக்கலாம். அப்புறம் உன் இஷ்டம்போலச் செய்துக்கொள்; என்னைச் சபிக்காதே. எல்லாம் உன் விதியின் பயன். தெய்வத்தின் கட்டளை. இதைப்படித்ததும் கிழித்துவிடு.

இங்ஙனம்,

சீனு.

உண்மையாகச் சொல்லுகிறேன். எனது ரெத்தம் கொதித்தது! தேகம் கிடுகிடென்று ஆடியது, துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது! கண்ணீர் ஆறாய் பெருகியது! கைகால்கள் சோர்ந்தது; என்னால் பேசமுடியவில்லை. நிற்கமுடிய வில்லை, என் உயிரில் பாதி போய்விட்டது!

"உலகில் பெண்களை எந்தவிதத்திலும் நம்பக்கூடாது; பணத்திற்காசைப்பட்டு எதையும் செய்வார்கள்; "பெண்மதி பேதமை" என்று "சாக்கடை" நீதி பேசுகிறது இந்துமதக் கிரந்தங்கள்!" இவைதான் கடவுள் வாக்காம்! உண்மையில் இதைச்சொன்ன கடவுள் இன்றைக்கு என் கையில் கிடைத்தாலுங்கூட அவருக்குச்சரியான புத்திபுகட்டி "ஆண்களெல்லாம் அடிமடையர்கள்" "மோசக்காரப்பயல்கள்" என்று அவர் வாயாலேயே சொல்லும்படிச் செய்து விடுவேன். என் நெஞ்சு பதைக்கிறது!

அந்தோ! என்னை இக்கதிக்காளாக்கிய 'மனிதப்பிண்டங்கள்" நன்றாய் வாழ்க! பெற்றோர்களாகட்டும், அந்தக் கள்ள வேஷதாரியாகட்டும், கொடிய வஞ்சகன் சீனுவாகட்டும், இவர்களெல்லாம் "மனித மிருகங்கள்"! சமூகத்தின் அடிமைகள்! கோழைகள்! இன்னும் இந்தப்பேய்க் கூட்டத்

தோடு நான் சேரவா? .........ச்சீ! ......இனி முடியாது; அந்த "நாய்" வாழ்வு எனக்கு வேண்டாம். "விதவையாக ஒரு பெண் இந்து சமூகத்தில் இருப்பதைவிட இறப்பது மேல்!" இதுவே நான் கண்ட உண்மை!

எப்படியோ ஆறுமாதங்கள் சென்றுவிட்டன. ஆம்! இதை எழுதும் இன்றைக்குமட்டும் நான் "விதவை," நீங்கள் ஆச்சரியப்படலாம்! நாளைக்கு நான் மணப்பெண்! கெட்டவன் கெட்டவளாகவே இருக்க யாரும் விரும்பமாட்டார்கள்! அப்படி விரும்புவது மனிதாதாபிமான மற்ற தன்மை! தீவிர சீர்திருத்தவாதியான மதுரை "அஹமத்கான்"! என்ற முஸ்லீம் இளைஞருக்கும், பிராமணப் பெண்ணாகிய எனக்கும், நாளை யதினம் சென்னை "விதவா விவாகச் சங்க"த்தின் ஆதரவில் "பதிவுமணம்" நடைபெறும், என் வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தம்!

"எனது சுயசரிதம் நமது சமூகத்திற்கும், சமூகப் பழக்கவழக்கங்களைப் பாதுகாக்கும் காங்கிரஸுக்கும், சனாதன வைதீகச் குழுவினர்க்கும் அறிவுறுத்தலாக இருக்கவேண்டும்"! இதுவே எனது ஆசை!

இங்ஙனம்,
காமு.

---

இந்துக்களுக்கும் பஞ்சமர்களுக்கும் எத்தகைய பந்தமுமில்லை. எங்களை இந்து சமூகத்தில் சேர்க்கக் கூடாது.

இந்து தலைவர்கள் பிரசங்க மேடைகளில்தான் பேசுகிறார்கள். கிரியாம்சையில் ஒன்றுஞ் செய்யமாட்டார்கள்.

டாக்டர் அம்பேத்கார்.

சுயராஜ்ஜியம் பெறும்போது நாங்கள் அடிமைகளாகவும் அவர்கள் எங்கள் எஜமானராகவும் இருப்பதற்காக எங்களைப் பற்றி அவர்கள் ஒன்றுமே பிரஸ்தாபிப்பதில்லை. இங்கிலாந்து தொழிற் கட்சியார் கொள்கைகள் உண்மையானவைகளாக இருந்தால் கஷ்டப்படும் எங்களைக் காப்பாற்றுவது அவர்களுடைய பொருப்பாகும்.

கோவை, R. ராஜகோபால்.

# நரியின் நயவஞ்சகம்.

கா. வேலாயுதம்

ஒருநாள் ஒரு பாழுங்கிணற்றுக்குள் ஒரு குள்ள நரி விழுந்து, கிணற்றில் மேடாயிருந்த ஒரு பாகத்தில் நின்றுகொண்டுவெளியே வருவதற்கு வழிகாணாது திகைக்கும்சமயத்தில் அங்கு ஒரு ஆடு வருவதைக்கண்டது. அப்பொழுது ஆட்டைப்பார்த்து நரி, இங்கு இத்தண்ணீரின் சுகமும நிழலின் அருமையும் என்னால் சொல்லுந்தரமன்று. உனக்கு வேண்டுமானால் இங்கு வந்து சுகிக்கலாம் என்றது.

இதைக்கேட்ட வெள்ளாடு உண்மை என்று நினைத்து உள்ளே குதித்து விட்டது. உடனே குள்ள நரி அதன் முதுகின் மேல் ஒரு காலும் தலைமேல் ஒரு காலும் வைத்து மேலே தாண்டிச் சென்றது. ஆடும் கணப்பொழுதில் தான் இருக்கும் ஆபத்தான நிலமையை உணர்ந்து குள்ள நரியை உதவி கேட்டது. அந்தச்சமயம் ஸ்ரீகிருஷ்ணன் அருச்சுனனுக்கு உபதேசம் செய்ததுபோல் குள்ள நரி சில இதோபதேசங்களை எடுத்து விளக்கிற்று.

அதாவது:- "அடே நீ இருக்கும் நிலமையை நன்கு நினைத்துப்பார். மோக்ஷமென்னும் நிலையை அடைய உனக்கு இன்னும் ஒருபடிதான் உண்டு. நல்ல தண்ணீர் உனக்கு உண்டு நிழலும் உண்டு. நீ மூன்று நேரமும் நீராடி நிழலில் உட்கார்ந்து தவம் செய்வாயாக. பகவானைத் தியானித்து நற்கதியை நாடு. நீ இந்த நிலைமையில் இப்பொய்யுலகில் எங்களோடு சமமாக வாழவேண்டுமென்று ஏறாசைப்படாதே. அது சனாதன தர்மத்துக்கு விரோதம். என்னைப்போன்ற உயர்ந்த வகுப்பினர் உம்மவரை நடத்துவது உங்களுக்குக் குரூரமாகவும் அநியாயமாகவும் தோன்றலாம். ஆனால் தருமத்தை உணரும் ஆற்றல் போதுமான அளவு உங்களிடம் இல்லாமையினால் உங்களுக்கு அவ்வாறு தோன்றும். நீங்களும்தருமத்தை நன்றாய் உணரும்போது நாங்கள் செய்வது நியாயம் என்பது தெரியும். இப்போது நான் சொல்லுவதைக் கேள்.

"பறையனுக்கு எண்ணெய் ஸ்நானம் செய்வித்து நல்லாடை கொடுத்து நல்லுணவு கொடுப்பினும் அவன் பிராமணனா

வனோ! ஒருநாளும் ஆகமாட்டான். அவன் எவ்வளவோ காலம் பிராமணனுக்கு அடிமை செய்து மாறிமாறிப் பிறந்து கடைசியாகப் பரதக்கண்டத்தில் பிராமணனாய்ப் பிறக்க வேண்டும்! அதுபோல் நீயும் எவ்வளவோ காலம் தவம் செய்தால், என்னைப்போல் நரியாய்ப்பிறக்கலாம். அப்பொழுது நீ எங்களோடு சமமாய் வீற்றிருக்கலாம். ஆகையால் நீ விரைந்து தவம் செய்வாயாக.

---

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுயராஜ்யத்தின் விசேஷத்தையும், ஜீவகாருண்யத்தின் மகிமையையும், சுகாதாரத்தின் தேவையையும் கூறப்போனால் அவர்கள் அதைகொஞ்சமும் கவனிக்காமல் உண்பதற்குச் சோறும், குடிக்கத்தண்ணீரும், அடிமைகளாய் நடத்தப்படாமையும் வேண்டும்என்பர். அவர்கள் பெரியசாப்பாட்டு ராமர்போலும். ஆனால் நீஅவ்வளவு மோசமாய் இருக்கமாட்டாய் கர்மயோகம் என்னும் கடமையைப் பற்றியும், புண்ணியபாவங்கடந்த நிலையில் பிர்மஞானத்தைப் பற்றியும் பேசும்போது ஆர்ச்சுனன் பாவபுண்ணியத்தை நினைத்தான். நீ அவ்வளவு மோசமாய் இருக்கமாட்டாய். நீ அடையவேண்டிய நற்கதியைப்பற்றி நான் பேசும்போது, நீ வெளி உலகில் மறுபடியும் வந்து துன்பம் நிறைந்த உலக விவகாரத்தில் ஈடுபட்டு மித்தையான உலகக் கவலையில் மூழ்குவதற்கு ஆசைப்பட மாட்டாயென்று நம்புகிறேன்.

"நான் என்னால் இயன்றவரை என்னுடைய ஓய்வு நேரங்களில் உன் இருப்பிடத்தை நானே தேடிவருவேன். அப்படி உன்னிடம் வருவதனால் எனக்கு ஏற்படும் கண்ணியக்குறைச்சலை நான் கஷ்டப்பட்டாவது பொறுத்துக் கொள்வேன். எவ்வளவு கருப்பாய் நீ இருக்கிறாய்! சேற்றுடன் கூடி எவ்வளவு அழுக்காயிருக்கிறாய்! உன் பற்களைப்பார், எவ்வளவு மொண்ணை! இன்னும்பார், உனக்கு வாலே அதிகமாய் இல்லை! இவ்வளவெல்லாம் இழிந்த தன்மைகள் உம்மிடமிருந்தும் நான் உம்மை அப்படியொன்றும் இகழாமல் உன் சவகாசம் வைத்துக்கொள்கிறேன். என் இனத்தவர் என்னைப்பழிப்பார்கள்; அவமதிப்பார்கள். ஆனால் அது எனக்குத் தேவையில்லை. கடவுள் சித்தமும் காந்தி விருப்பமும் பூர்த்தி யாவதே என் நோக்கம். ஆகையால் எனக்கு வரும் அவமதிப்பை நான் பொறுத்துக் கொள்வேன். ஒருவன் உயிரை விடலாம், மானத்தை விடலாமா? முடியாது. பிறர் என்ன நினைப்பினும் சரி. உயிரினும் அரிதான மானத்தை நான் உன் பொருட்டுத்தியாகம் செய்து, அடிக்கடி இங்கு

வந்து உன்னை உன் இருப்பிடத்தில் பார்த்து உனக்கு வேண்டிய இதோபதேசங்களைச் சொல்லத் தயாராயிருக்கிறேன்.

"ஆகையால் என் ஆருயிர்ச் சகோதரனே நாமெல்லாம் இத்தியத்தாயின் பிள்ளைகள்; ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம். வேற்றுமையினிடையே ஒற்றுமையும் இருளினிடையே ஒளியும் காண உன்னால் முடியாமையினால் மயங்குகின்றாய் பாவம்! உனக்காக நான் கண்டுபிடித்த இந்த நிழலில் ஒரு மனதாயிருந்து தவம் செய்வாய். நான் வருகிறேன். ஈசன் உனக்கு விரைவில் அருள் புரிவாராக" என்று கூறித் தன் சோரப்பற்களைக்காட்டிக் குள்ளநரி போய்விட்டது. ஸ்ரீ கிருஷ்ணன் யுத்த களத்தில் ரகசியமாய் அர்சுனனுக்குச் செய்த உபதேசங்கள் நாடெங்கும் பரவினதுபோல், இந்த நரியின் இதோபதேசங்கள் நாடெங்கும் பரவலாயின. அந்த உபதேசமொழிகளில் பயின்ற பல உபதேசிகள் ஏழ்மையும் அறியாமையும் நிறைந்த சில பரிதாபகரமான மக்களிடம் சென்று தங்கள்உபதேசங்களைப் பொழிகின்றனர்.

ஏற்கனவே தங்களுக்கும் தங்கள் ஆடுமாடுகளுக்கும் உணவின்றி மெலிந்து வருந்தும் ஒருகுடியானவனைச்சந்தித்து மேற்சொன்ன உபதேசிகளில் ஒருவர் தன் இதோபதேசங்களை ஆரம்பித்தார்.

"அடே பாவி நீ ஏன் இந்த ஆடுமாடுகளை இவ்வாறு மெலிய விட்டாய் நீ நரகம் சேர்வாய். பசுவின்இனங்களைத் துரத்துவதாயிருந்தால் கையைத்தட்டியேனும், வைக்கோல் அல்லது தர்ப்பையினால் அடித்துத் துரத்த வேண்டுமென்று வேதாகமங்கள் கூறியிருக்க, துஷ்டனாகி நீ இந்த எருத்தைத் தடியாலும் அடித்திருப்பாய் போல் இருக்கிறது. சிறு சிறு காயங்களும் காணப்படுகின்றன. இந்த வாயில்லாத குற்றமற்ற ஜீவர்களை ஜெகத் ரக்ஷகர் உன்னிடத்தில் ஒப்படைத்தார். நீ அவற்றை இவ்வாறு துன்புறுத்தினாய். கடவுளின் பிள்ளைகளாகிய இவற்றை இவ்வாறு கஷ்டப்படுத்திய உன் பிள்ளைகள் நல்லகதியை அடைவார்களா? நீயும் நரகந்தான் அடைவாயென்பது உனக்கே தோன்றவில்லையா? பாவீ!" என்கிறார் காருண்யமிக்க உபதேசியார்.

அவ்வெளியவன் என்ன செய்வான்! எலும்புக்கூடு போன்ற சரீரத்தையுடைய அவன் தன் குழிந்த கண்கள் கலங்

கித் தன் மெலிந்த கால் கடைகளைப் பார்த்துவிட்டு, நிழலி லேயே இருந்ததனால் வெளுத்து கொழுத்த சரீரத்தையுடைய ஐயாவைப்பார்த்து 'நான் ஒரு பாவி ஐயா'' என்று கூறி ''ஐயோ கடவுளே என்னை நரகில் தள்ளாமல் இருக்க ஏதா வது வழியில்லையா?'' என்று நினைக்கிறான்.

வேறோர் இடத்தில் ஒரு கிழவி, குஞ்சி குஞ்சியாய்க் கிழிந்து தொங்கும் அழுக்கான ஒரு வெள்ளைப்புடவையைத் தரித்து, வீட்டு வாசலில் நின்றுகொண்டு ஆழ்ந்த யோசனை யில் இருக்கின்றாள்.

அடுத்த வீட்டு அங்காயி ஒரு நல்ல தாய்க்கோழி வைத்தி ருப்பதினால் அவளுக்குச் சந்தை சந்தைக்கு உப்புச் செலவுகள் வாங்குவதைப் பற்றிக் கவலையில்லை. முட்டைகளை விற்கி றாள், ஒரு குஞ்சை விற்கிறாள். சந்தைச் செலவைத் தாட்டு கிறாள். கவலையே இல்லை. நமக்கு ஒன்றிருந்தால் எவ்வ ளவு சௌகரியமாயிருக்கும்! அறுத்துப்போன மகள் இரும லும் காய்ச்சலுமாய் இரண்டுமாதமாய்ப் படுத்துக்கொண் டாள். இரண்டு குஞ்சுகள் இருந்து காய்ச்சி ஊற்றினால் நோய் நீங்கிக் கூலிக்குப்போவாள். சந்தைச்செலவுகளும் நடக் கும். என்ன செய்வேன் கூலியோ கிடைக்கிறதில்லை. கிடை த்த வேலைக்கும் நமக்கு வேண்டியபோது கூலிப்பணம் வரு தில்லை. வேலை கிடைக்காதபோது கொஞ்சம் நூல் நூற்க லாமென்றால் ராட்டை வாங்கப் பணம் வேண்டும். எல்லாவற் றிற்கும் ஒரு தாய்க்கோழியாவது இருந்தால் எத்தனை விஷ யங்களைத் தாட்டும். என் செய்வேன். எங்கு போவேன். அவல் போல நாலு பணம் போட்டாலல்லவோ ஒரு கோழி வாங்கலாம். சேர்ந்தாற்போற் நாலு பணத்துக்கு யாரைக் கேட்பேன்?'' இவ்வாறு கிழவி யோசிக்கும்போது ஒரு கார் வந்து நிற்கின்றது.

அலங்காரமான உடைகள் தரித்த நால்வர் இறங்குகின்ற னர். காரைக் கண்டதும் ஒரு சிறு கூட்டம் கூடிற்று. கால் வரில் ஒருவர் இடையில் செம் பட்டு. மேலுக்கும் அப்படியே நீண்ட அங்கியும் அப்படியே. காலில் மான் தோல் வார் போட்ட செருப்பு. கையில் தக்ளி, நெற்றியில் திருநீற்றினி டையில் சவ்வாதுப் பொட்டு, மூக்குக்கண்ணாடி, தலை மொட் டை, மேனி எலுமிச்சம்பழந்தான். இவர் பேசுகிறார்.

இவர் ஜீவகாருண்யத்தைப்பற்றி விரிவுரை நிகழ்த்திக் கடைசியில் "இங்கே திரியும் கோழிகளெல்லாம் உங்களுடையவைதானே. ஏன் இவைகளை வளர்க்கிறீர்கள்? இவைகள் அசுத்தத்தைப் பரப்புகின்றன. நோய்களை கிராமத்தில் பரவச் செய்கின்றன. இதுவும் தவிர இவைகளை நீங்கள் வளர்த்துக் கடைசியாக காளியம்மனுக்கென்றும், மாரியம்மனுக்கென்றும், மருமகனுக்கென்றும் பேரைச் சொல்லிக் கழுத்தை அறுக்கின்றீர்கள். அவை பதை பதைப்பதைப்பற்றிக் கடவுள் பதைக்கிறார். உங்கள்மீது கோபிக்கின்றார். இந்த வர்க்கங்களைக் கொன்று நீங்கள் பண்டிகை கொண்டாடுகின்றீர். உங்களுக்கு அந்த கதி என்று வருமோ" என்கிறார் ஜீவகாருண்ய சுவாமிகள்.

ஒரு சிறிய சேரி. அங்கு பதின்மூன்று குடும்பங்களுண்டு. சேரியின் முன்புறத்தில் செத்துப்போன பசுங் கன்று ஒன்று கிடக்கின்றது. அதைச் சுற்றிலும் ஆடையில்லாத சிறு குழந்தைகளும், வேறு புதுத்துணியோ இனாம் துணியோ கிடைக்கும்வரை மாற்றிக்கட்டுவதற்கு இல்லாததனால் அழுக்கடைந்த துணிகளுடன் பெண்களும் ஆண்களும் உட்கார்ந்து கொண்டும், நின்றுகொண்டும் வரப்போகும் விருந்தை நினைத்துக் குதூகலமாயிருக்கின்றனர். இரண்டு மாதங்களுக்கு முன்னால் நடந்த விருந்தைப் பற்றியும் பேசுகின்றனர். சிலர் உரித்துப் பங்கிடுவதற்கான ஆயுதங்களைத்தேடுகின்றனர். சிலர் "இதைப் போய் இரண்டு ரூபாய்க்கு ஏன் வாங்கினீர்கள்? தோலில் நாலு பணம் கிடைத்தாலும் ஒன்றரை ரூபாய் இருக்கிறதே. வீட்டுக்குக் காசு குறைய ஒரு பணம் ஆகிறதே. ஆனால் இரண்டு ரூபாயுக்குக் குறைச்சலாகக் கொடுப்பதாகச் சொன்னால் எஜமார் காறித் துப்பிவிடுவார்கள்........." என்கிறார்கள்.

இந்தச் சமயத்தில் தேச முன்னேற்றத்திற்காகப் பாடுபடுபவரும் தாழ்த்தப்பட்டோரை உயர்த்தவேண்டுமென்ற முழு நோக்கங் கொண்டவருமான சிலர் அங்கு வருகிறார்கள். மாலை நேரம் உலாவப் போவதற்கும் சேரிகளில் சென்று பிரசாரம் செய்வதற்கும் தக்க நேரம். தங்கள் சிற்றுண்டிகளை முடித்துக்கொண்டனர். பாதாம் ஹல்வா, குலோப்ஜான், ப்ரூட் சேல்ட், ஐஸ்கிரீம் முதலான சிற்றுண்டிகளைத்தவிர ஒன்றும் சாப்பிடவில்லை. காப்பி விஷச் சத்துள்ளதென்று ஓவல்டின் சாப்பிட்டிருக்கின்றனர். சிற்றுண்டி மட்டிலும் கழித்த

சமயமாதலின் நன்கு பேசுவதற்கு ஊக்கமுள்ளவராயிருக்கின்றனர். சிறிது நேரம் செத்துக் கிடக்கும் சன்றைப் பார்த்து அனுதாப மொழிகள் கூறுகின்றனர். பார்ப்போர் இரண்டு வேடிக்கைகளையும் பார்க்கின்றனர். பிறகு இவர்கள் சாந்தமான குரலுடன் மெதுவாகப் பேச ஆரம்பிக்கின்றனர்.

“ஹரி ஜனங்களே! இந்தச் சவத்தை ஏன் இங்கு கிடத்தினீர். சீக்கிரம் தூரமாய்க் கொண்டுபோய்ப் புதையுங்கள். மாமிசம் அழுக ஆரம்பித்துவிடும். புழுக்கள் உண்டாம். விஷவாயுக்கள் கிளம்பும். உங்கள் சேரியில் நோய் நுழையும். ஆகையால் சீக்கிரம் புதையுங்கள் என்கின்றனர்.

சேரியிலுள்ள ஒருவன் “சாமீ நாங்கள் இதைத்தான் தின்போம். எங்களுக்கு இதனால் நோய் வராது. புழுக்களை வேண்டுமானாலும் காய்ச்சிக் குடிப்போம். எங்களுக்கு நோயைப்பற்றி கவலைஇல்லை” என்கிறான்.

“ஆனால் உங்களுக்கு எதைப்பற்றித்தான் கவலை?”

“எங்களுக்கெல்லாம் சோத்துக்கில்லா கவலைதான்.”

“இந்தக் கவலை உலகமெங்குமுள்ளதுதான். அதிலும் உங்களைப்போல் சோம்பேறிகள் கஷ்டப்படுவது இயற்கை. மேலும் நீங்கள் குடியினால் உங்கள் பணத்தையெல்லாம் வீணாக்குகிறீர்கள்- அந்த வழக்கத்தை விட்டுவிட்டால் பணம் மீதமாகும்.”

“சாமீ நாங்கள் தீபாவளி நோன்புக்குக் கள்ளுக் கடைக்குப் போவோம். ஆடிப் பண்டிகைக்குப்போவோம். இன்னும் ஏதாவது பண்டிகைக்குப் போவோம். எங்கள் எஜமார் வீட்டில் ஏதாவது விருந்தானால் அன்றைக்குக் கிடைக்கும். சாப்பாடும் கிடைக்கும்.”

“மற்ற நாளெல்லாம் சும்மாவா இருக்கிறீர்கள்?”

“குடிப்போம். கூழோ கும்மாயமோ புளிச்சதண்ணீரோ குடிப்போம். அன்றைக்குத்தான்.........சாமி எஜமார் போங்கோ. நாங்கள் இதைக்கூறுபோடப்போகிறோம்.” “அடே மூடர்களே, நாங்கள் சொன்னதென்ன? நீ சொல்லுவதென்ன? இதனால் தான் உங்களைத்தொடக்கூடாது என்றனர். நீங்கள் குளிப்பதுமில்லை. நீங்கள் தின்பது பிணமா?” “சாமி கோபித்துக்கொள்ள வேண்டாம். எங்களை யாராவது தொட்டால் எங்களுக்கு வயிற்றுக்குக் கிடைக்

குமா? எங்களுக்கு குளிப்பு ஏதுங்கள் சாமி, குடிக்கவே தண்ணீர் கிடைத்தால் அதுவே போதாதா? ஏதாவது தோட்டத்தில் அல்லது கொல்லையில் ஏற்றம் இறைக்கவில்லையென்றால் அன்றைக்கு எங்களுக்கு தண்ணீர் கிடையாது முதல் நாள் தண்ணீரில் உஷாராக வைத்திருந்தவர்கள் பிழைத்தார்கள். மழைக்காலமாயிருந்தால் மடைகளில் எங்களுக்கு எப்போ வேண்டுமானாலும் தண்ணீர் கிடைக்கும். எங்கள் தலைவிதிக்குச் சர்க்கார் தான் என்ன செய்வார்கள்! வெள்ளைக்காரத்துரைகளுக்கு அரமனைகட்டவேண்டுமாம். அதைப்பார்க்கிறதா எங்கெழவை எடுக்கிறதா சாமீ நீங்க போங்கள் எங்களுக்கு நேரமாச்சு.

நாங்கள் இவ்வளவு சொல்லியும் இந்தப் பிணத்தைப் புதைக்கமாட்டீர்களா? தின்னத்தான் வேண்டுமா?''

''சாமி இனிமேல் வேண்டுமானால் தின்னாமல் இருப்பதற்கு எங்கள் ஊர் எசமானரையெல்லாம் கேட்டுக்கூட்டம் போடுகிறோம். எங்கள் ஊரில் மாடோ எருமையோ செத்துப்போனால் அதை எடுத்துக்கொண்டு அவர்கள் கேட்கிற பணத்தை நாங்கள் கொடுக்கவில்லையென்றால் எங்கள் எசமானரெல்லாம் எங்களைக் குடி வைக்கமாட்டார்கள். நாங்களெல்லாம் கெண்டிபோய்ச் சேரவேண்டியதுதான். நாங்கள் இதைத்தின்னவில்லையென்றாலும் பெரிய தனமா என்பார்கள். இந்தக் கன்றுக்கு நாங்கள் இரண்டுரூபாய் தரவேண்டும்.''

''இரண்டு ரூபாய் வேண்டுமானாலும் கொடுத்து விடுங்கள். இதைத்தின்றுவிட்டு எத்தனை ரூபாய் நோய் விலைக்கு வாங்குவீர்கள்? எத்தனை நாளைக்கு ஆஸ்பத்திரிக்கு நடக்க வேண்டும்?''

''சாமீ எங்களுக்கும் இதோ இந்தப்பன்றிகளுக்கும் நோய் தான் இல்லையென்றேனே. இதைத்தின்று எங்கள் குழந்தைகுட்டியெல்லாம் நன்றாயிருப்பார்கள். அந்த பெருமாமிசம் தின்றால் தாய்க்கு நல்ல பால் இருக்கும் இரண்டு ரூபாய் போட்டு அநியாயமாய்ப் புதைத்துவிட்டால் என்ன வரும்? ஒரு ரூபாத் தோலும் வீணாய்ப்போய், குழந்தை குஞ்செல்லாம் ஏங்கியும் போம். நடப்பதற்குக் கால் வராது; வீக்கம் வரும். ஆகையால் இந்த ஒருதடவை மன்னிப்பு செய்யுங்கள். எஜமான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்''

"நீங்கள் இப்படி வழக்கங்கள் வைத்திருப்பதானல்லவா உங்களைத் தீண்டாமலும் கோயிலுக்குள் விடாமலும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் மேல் குற்றமென்ன?"

"நாங்கள் கோயிலுக்குள் வந்து என்ன செய்யப் போகிறோம். எங்களுக்குச் சூடத்துக்குக் காசேது சாமீ?"

"என்ன செய்வார்கள் கடவுளை தொழவேண்டியது தான்."

"இப்பவும் அந்தக் கடவுளை நினைக்காமலா இருக்கிறோம்? சீக்கிரம் சாவு வரவேண்டும் என்று நித்தந்தான் வேண்டுகிறோம்.

"இந்த மாதிரி பாவ புண்ணியம் இன்னதென்று தெரியாமல் இருக்க மாட்டார்கள்."

"சாமீ எங்களுக்கு பாவமும் வேண்டாம் புண்ணியமும் வேண்டாம். அதையெல்லாம் படித்துநாங்கள் மணியமாபார்க்கப்போகிறோம்?"

"பாவ புண்ணியத்துக்கும் மணியத்துக்கும் சம்மந்தமில்லை. அவற்றையெல்லாம் தெரிந்து புண்ணியம் செய்தால் நல்ல கதி கிடைக்கும் என்கிறார்கள்."

"எங்களுக்கு புண்ணியமாவது பாவமாவது பண்ணிக் கொண்டிருக்க நேரமில்லை. எங்களுக்கு அந்த ஆசையெல்லாம், எதற்கு சாமீ. எஜமாரைப்பேன்றவர்களுக்கு வேண்டும்."

"உங்களுக்கு என்ன தான் ஆசை"

"ஒளிக்காமல் சொல்லி விடுகிறேன். கோபித்துக் கொள்ளாதீர்கள். எங்களுக்கெல்லாம் ஒரு குடிதண்ணீர்க்கிணற்றிலேதான் ஆசை. அது கிடைத்து விட்டால் நாங்கள் தான் ராஜா. அப்புறம் எங்களுக்கு ஒரு ஆசையும் கிடையாது. நோய் படுத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போகிற ஆசையுமில்லை, கோயிலுக்குப் போய்க் கொண்டு பாவம் பண்ணுகிற ஆசையுமில்லை. எஜமாருக்குச்சரி."

"இப்போது உங்களுக்கு ஏறாது. நாங்கள் போய்விட்டு இன்னொரு நாளைக்கு உங்கள் குழந்தைகளுக்கு எண்ணெயும் சோப்பும் வாங்கிக்கொண்டு வருகிறோம்." என்று கூறிக் கொண்டே நகர்கின்றனர்.

"சாமீ எண்ணெய் வேண்டாம் குழந்தைகளுக்குக் கண் ணுப் பொங்கிக் கொள்ளும். அந்தக் காசிலே உப்பு வாங்கிக் கொண்டு வாருங்கள்." என்று சொல்லி விட்டுத்தங் கள் வேலையைப்பார்க்க ஆரம்பித்தனர்.

அமெரிக்கா தேசத்துப் பாதிரிமார் இந்தியாதேசத்துக்கு வரும்போது உபதேச மூட்டைகளைத் தூக்கி வருவதுநல்லது என்பதைப்பற்றி விவேகானந்தர் விவரமாய்க் கூறினார். அதுபோல் நம்ஜீவகாருண்யத்தால் நம்நாட்டு ஏழைமக்களுக்கு இதோபதேசம் செய்வதற்கு வேதாந்த மூட்டைகளைச்சுமந்து வருவதைக்காட்டிலும் குடி தண்ணீர்க் கிணறுகள் வெட்ட மண் வெட்டிகளை சுமந்துவருவது நல்லது. நம் மக்கள்பால் ஏழ்மையால் சார்ந்திருக்கும் அழுக்கைத் துடைக்கும் கைக ளால் முதலில் அவர்கள் சொரியும் கண்ணீரைத் துடைப்பது நல்லது. அவர்கள்மேல் ஆசார மூட்டைகளை ஏற்றுவதைக் காட்டிலும் கவலை மூட்டைகளை இறக்குவது நல்லது.

---

"பெண்களுக்குகணவனே கா ணுந்தெய்வம். அவன் சொற்படி நடந்து அவனுக்கு மகிழ்ச்சியூட்டுவதே பெண் களின் நீங்காக் கடன். அவன் எவ்வளவு குற்றங்குறை யுடையவனாயிருந்தாலும் அவன் எவ்வளவு துஷ்டனா யிருந்தாலும் சரி-மனைவி அவனைக் கடவுளாக மதிக்க வேண்டியதுதான் கடன். புருஷன் அவளைத்திட்டினால் பெண் அவன் கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்கவேண் டும். கணவனே தன்னைக் காக்கும் கடவுள் என்ற நம் பிக்கையை பெண்கள் மனமொழி மெய்களால் பிரத்தியட் சமாகக் காட்டவேண்டும்."

இந்து மதம்.

# புகழ் மார்க்கம்.

[ பர்னாட்ஷா. ]

தோழர் பெர்னார்டுஷா கூறியதாவது:— என்னைப்பற்றி எனக்கொன்றுந் தெரியாது; நல்ல மனிதர்களைவிடக் கெட்ட மனிதர்களே அதிக உண்மை கூறுவார்களென்பதாக நான் நம்புகிறேன். நல்ல ஜனங்கள் தாங்கள் செய்தாற்றிய வேலைகளைப்பற்றி வெளியிடுவதை அவர்கள் விரும்பமாட்டார்கள். தீயமனிதர் எப்பொழுதும் தாங்கள் சாதித்துவிட்ட காரியங்களை வானமளாவப்பேசுவர்

நான் ஓர் பெரிய மனிதனென்பதாக நீங்கள் நினைக்கின்றீர்கள்; இவ்விதமே பிரிட்டிஷ் ஆகாய வசனிக் கம்பெனியாரும் நினைக்கின்றனர். தாடி வளர்த்த மனிதர்களைப்போன்று நானும் ஓர் மனிதனாகும். எனினும், உங்களுக்கும் எனக்குமுள்ள வித்தியாசத்தையே நீங்கள் கண்டறிய விரும்புகின்றீர்கள். என்குணவிசேஷங்களில் நூதனமொன்றுமில்லை. நான் நாடகங்கள் எழுதக்கூடும். நீங்கள் நாடகம் எழுதமுடியாது. இதுதான் வித்தியாசம். ஆனால் நான் எதையும் எழுத முடியும். இல்லையெனில், நான் அநேகமாய் ஓர் துஷ்டனாகவே விளங்குவேன். இப்பொழுதுநான் நல்ல சௌகர்யமுடையவனாயிருக்கிறேன். ஆனால் நான் அதிக கௌரவத்திற்கு அல்லது மரியாதைக்குத் தகுதியுடையவன் என்பதாக பத்திரிகைகளும் விளம்பரப்படுத்துகின்றன. த்திரிகைகள் கூறுவதை நம்பவேண்டாமென கேட்டுக்கொள்ளுகின்றேன்.

குழந்தைகள் பெரும் பொறுப்பையளிப்பதாக யோசனையில்லாதவர்களே பேசுவார்கள். குழந்தைகள் சம்பாத்தியஞ்செய்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் வரையில் அவர்கள் பெருஞ்செலவையே நமக்குத் தருகின்றன. இவர்களை வளர்ப்பதற்குப் பெற்றோர்கள் ஒன்றுஞ் செலவிடக்கூடாது. இனி பிள்ளைகளின் நடவடிக்கைகளுக்கும், அவர்கள் குணதோஷங்களுக்கும் எதிர்கால வாழ்க்கைக்கும் பெற்றோர்களே ஜவாப்தாரியெனக்கூறுவது வம்புப்பேச்சாகும். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாம் கொடுத்துதவாத குணபாவங்களுடன் பிள்ளைகள் பிறந்துவிடுகின்றன. அவர்களின் இயற்கையோடமைந்த குணங்களை நாம் மாற்றுவதெப்படி? காட்டுமிராண்டிகளின் குணங்களும் பிள்ளைகளுக்கு அமைவதுண்டு.

எனினும், குழந்தைக்கு இயற்கையாயமைந்த குணம்

நன்றாயிருந்தாலும் தீதாயிருந்தாலும் பெற்றோர்கள் அக்குழந்தைக்குப் பொறுப்பாளிகளல்ல. ஆனால் அக்குழந்தை மிகக்கொடூர குணமுடையதாயிருந்தால் குடும்பத்தை அக்குழந்தையின் தொந்திரவுகளினின்றும் பாதுகாப்பதில் பெற்றோர்கள் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். குழந்தைக்குதுஷ்டகுணமில்லையெனில் அதன் இஷ்டம்படி விட்டுவிடுவதே பெற்றோர்களுக்கு நலமாகும் உலகில் ஜனங்கள் நிரம்பவேண்டும். ஆனால் பிள்ளைகளுக்குச் செலவிடத்தகுந்தவாறு பெற்றோர்களுக்குச் சம்பளங்கொடுக்கப்படுகின்றதா என்பதைக் கவனிக்கவேண்டியது சர்க்காரைச் சார்ந்த கடமையாகும்.

எனது பெற்றோர்கள் என்னைப்பற்றிப் பிரமாதமான பொறுப்பெதையும் வகிக்க வில்லை. என்னைப் பெற்றெடுத்ததிற்காக அவர்கள் என்னைக்காப்பாற்ற வேண்டியதாயிருந்தது. சில பெற்றோர்கள் தங்கள்குழந்தைகளின் குணத்தைக் கவனிப்பதில் விசேஷ சிரமம் எடுத்துக் கொள்கின்றனர். ஆனால், அவர்கள் தங்கள் குண விசேஷங்களைப் பற்றிச் சற்றேனும் சிந்திப்பதில்லை. எனது தாய் நல்லொழுக்கத்தைப் பற்றியோ அல்லது வேதத்தைப் பற்றியோ என்னிடம் ஒன்றேனும் கூறியிருக்க மாட்டாள். இவ்வகையில் எனது தகப்பனார் சிறிது முயற்சியெடுத்துக் கொண்டார். அவர் சுருட்டுப் புகைப்பது போன்று நான் ஓர் குழாயை வாயில் வைத்துக்கொண்டு பாவனை செய்தேன். அப்பொழுது ஒருநாளும் சுருட்டுப் புகைக்கக்கூடாதென்பதாக எனது தகப்பனார் எனக்குப் புத்தி கூறினார். எனது தகப்பனாரின் வேண்டுகோள் என் மனத்தில் நன்கு பதிந்தது. இதனால் நாளிதுவரையும் நான் சுருட்டுப் புகைத்ததில்லை; க்ஷவரஞ் செய்து கொண்டதில்லை மது அருந்தியதில்லை. எனது தகப்பனார் என்னிடம் அடிக்கடி கூறியதென்ன? "நான் வாழ்க்கையில் தோல்விகண்டேன், விரும்பத்தகாக குணங்கள் அநேகம் என்னிடமிருக்கின்றன. ஆகவே, என்னைப் பின்பற்றி நடக்க வேண்டாம். எனது வாழ்க்கை உனக்கு முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டும்" என்பதாக இடித்துரைத்தார். ஆகையால் நான் பெற்றோர்களுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகின்றேன். உங்கள் இயற்கைக்குணத்தை மறைக்கவேண்டாம். அப்படியாயின் உங்கள் குழந்தைகளெல்லாம் பெர்னார்டுஷாக்களாகத் திகழவழி யேற்படுவது சகஜம். "இது எனது உபதேசம்."

---

# பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

| | | |
|---|---|---|
| பெண் ஏன் அடிமையானாள்? ... ... | ரூ. | 0 5 0 |
| பிரகிருதிவாதம் ... ... ... | ,, | 0 3 0 |

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

| | | |
|---|---|---|
| முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ... | ,, | 0 5 0 |

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

| | | |
|---|---|---|
| நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ... ... | ,, | 0 3 0 |
| மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ... | ,, | 0 3 0 |

அறிஞர் இங்கர்சால் எழுதியவை

| | | |
|---|---|---|
| மதம் என்றால் என்ன? ... ... | ,, | 0 3 0 |
| கடவுள் ... ... ... | ,, | 0 5 0 |
| நான் சமுசயவாதியானதேன்? ... ... | ,, | 0 3 0 |
| வால்ட்டேர் ... ... ... | ,, | 0 4 0 |

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T, எழுதியவை.

| | | |
|---|---|---|
| மதமும் விஞ்ஞானமும் ... ... | ,, | 0 3 0 |
| பிரபஞ்ச உற்பத்தி ... ... ... | ,, | 0 3 0 |

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

| | | |
|---|---|---|
| மதப்புரட்சி ... ... ... | ,, | 0 4 0 |

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L, எழுதியவை.

| | | |
|---|---|---|
| மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும் I-ம் பாகம் | | 0 6 0 |
| ஷை II-ம் பாகம் | | 0 5 0 |

அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியது.

| | | |
|---|---|---|
| பகுத்தறிவு or கத்தோலிக் குருவின் மரண சாசனம் | | 0 4 0 |

தோழர் அ. இராகவன் எழுதியது.

| | | |
|---|---|---|
| பெண்ணுரிமையும் மதமும் ... ... | ,, | 0 3 0 |

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது

| | | |
|---|---|---|
| ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ... | ,, | 0 5 0 |
| ஷை காலிக்கோ பயிண்டு ... | ,, | 0 8 0 |
| மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நா. பி.) | | 0 4 0 |

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| 2. | லெனினும், மதமும் | 0 | 4 | 0 |
| 3. | பொதுவுடமைத் தத்துவங்கள் | 0 | 3 | 0 |
| 4. | கடவுளும், பிரபஞ்சமும் | 0 | 4 | 0 |
| 5. | கைவல்யம் அல்லது கிலக்கியானம் (இது சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது) | 0 | 8 | 0 |
| 6. | இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம் | 0 | 4 | 0 |
| 7. | ,, அயோத்தியாகாண்டம் | 0 | 8 | 0 |
| 8 | ,, ஆரண்ய காண்டம் | 0 | 4 | 0 |
| 9 | ,, கிட்கிந்தா காண்டம் | 0 | 4 | 0 |
| 10. | ஞானசூரியன் (நான்காம் பதிப்பு) | 0 | 5 | 0 |
| 11. | தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம் | 0 | 3 | 0 |
| 12. | மேயோ கூற்று மெய்யா? பொய்யா? (மூன்றாம் பதிப்பு) | 0 | 3 | 0 |
| 13. | பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை | 0 | 4 | 0 |
| 14. | ஈ.வெ.ரா. சீர்திருத்தமகாநாட்டு உபன்யாசம் | 0 | 2 | 0 |
| 15. | அகத்தியர் ஆராய்ச்சி | 0 | 2 | 0 |
| 16. | இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு | 0 | 2 | 0 |
| 17. | சுயமரியாதைப்பாடல் | 0 | 2 | 0 |
| 18. | கதர் மூட நம்பிக்கை (இங்கிலீஷ்) | 0 | 2 | 0 |
| 19. | சுயமரியாதைத் தாலாட்டு | 0 | 2 | 0 |
| 20. | பர்னார்ட்ஷா உபந்யாசம் | 0 | 1 | 0 |
| 21. | சோஷியலிசம் | 0 | 2 | 0 |
| 22. | போல்ஷ்விக் முறை | 0 | 1 | 0 |
| 23. | ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம் | 0 | 0 | 9 |
| 24. | கத்தோலிக்கர் வீண் கூச்சல் | 0 | 0 | 6 |
| 25 | சமதர்ம உபந்யாசம் | 0 | 0 | 6 |
| 26 | சோதிட ஆராய்ச்சி | 0 | 4 | 0 |
| 27. | மனுநீதி விளக்கம் | 0 | 2 | 0 |
| 28. | மறுப்புக்கு மறுப்பு | 0 | 3 | 0 |
| 29 | பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்) | 0 | 4 | 0 |

*Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmaivilakam Press, Erode.*